# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்13 வள்ளுவர் ஆண்டு 2029 ஆடி 10 ஞாயிற்றுக்கிழமை (26 07-1998) UTHAYAN – A Lively National Tamil Daily கதிர்: 205


## மாங்குளம் பகுதியில் மோதல் சம்பவங்கள்

கொழும்பு, ஜூலை 26

மாங்குளத்துக்கு தென்கிழக்கே மற்றும் குஞ்சுக்குளம் ஆகிய பகுதிகளில் நேற்று பாதுகாப்புப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் சம்பவங்கள் இடம் பெற்றதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் தெரிவித்தது.

இம்மோதல் சம்பவங்களின்போது விடுதலைப் புலிகள் தரப்பில் சிலர் உயிரிழந்தோ அல்லது காயமடைந்தோ இருக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

அதே சமயம் ஒலுமடுவில் படையினர் மேற்கொண்ட தேடுதலின் போது 20 மிதி வெடிகளையும் ஒரு கிளைமோர் கண்ணியையும் கண்டு பிடித்ததாக பலாலி இராணுவ தலைமையசெய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-7)

## வாஜ்பாயைக் கூட்டாகச் சந்திக்கும் முயற்சியில் தமிழ்க் கட்சிகள் தோல்வி

### தேநீர் விருந்திலேயே சந்திக்க ஏற்பாடு

கொழும்பு, ஜூலை 26

சார்க் மாநாட்டில் கலந்து கொள்வதற்காகக் கொழும்பு வரும் இந்தியப் பிரதமர் அடெல் பிஹாரி வாஜ்பாயை தமிழ்க் கட்சிகள் குழுவாகச் சேர்ந்து சந்திப்பதற்கு எடுத்த முயற்சி இறுதி நேரத்தில் தோல்வி கண்டிருப்பதாகத் தெரியவருகிறது.

குழுவாகச் சேர்ந்து சந்திப்பதற்குத் தமிழ்க் கட்சி ஒன்று பின்னடித்ததைத் தொடர்ந்தே இம்முயற்சி கைகூடவில்லை என்று கூறப்படுகிறது.

இதே வேளை தனித்தனியாக ஒவ்வொரு கட்சியும் வாஜ்பாயைச் சந்திப்பதற்கு வாய்ப்புக்கள் குறைவாகவே இருப்பதாகவும் —

எனினும் எதிர்வரும் 30 ஆம் திகதி

(10 ஆம் பக்கம் பார்க்க)

# படகுகளில் வந்த புலிகள் குருநகர் பகுதியில் தாக்குதல்!

## முறியடித்து விட்டதாக அரசதரப்பு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 26

யாழ்ப்பாணம் குருநகர் கடற் பகுதி ஊடாக யாழ். நகரப் பகுதிக்குள் ஊடுருவ முயன்றதாகக் கூறப்படும் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் வெள்ளிக்கிழமை நள்ளிரவு மோதல் இடம்பெற்றது.

படகுகளில் வந்த சுமார் 75 விடுதலைப் புலிகள் ஒரே சமயத்தில் குருநகர் இறங்குதுறை, சின்னக்கடை, கொழும்புத்துறைப் பகுதிகளில் தாக்குதலை நடத்தியதாகவும் —

படையினரின் காப்பரண்களைத் தாக்கி உள்ளே ஊடுருவ முற்பட்டார்கள் என்றும் — பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

வெள்ளிக்கிழமை இரவு 1 மணியளவில் இந்த மோதல் ஆரம்பமானது.

முதலில் குண்டுச் சத்தம் ஒன்று கேட்டதாகவும் அதனைத் தொடர்ந்து துப்பாக்கிச் சத்தங்கள் கேட்டதாக

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரி விபத்தில் ஐவர் காயம்

சாவகச்சேரி, ஜூலை 26

சாவகச்சேரி நகரப் பகுதியில் நேற்று இடம்பெற்ற மோட்டார்சைக்கிள் விபத்தில் புளொட், ஈ.பி.டி.பி. அமைப்புக்களைச் சேர்ந்த நால்வரும் ரியூஷனுக்கு சைக்கிளில் சென்றுகொண்டிருந்த

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மிஷன் கப்பலைச் சேர்ந்த ஒருவர் நேற்று விடுவிப்பு

வவுனியா, ஜூலை 26

கடந்த வருடம் மன்னார் கடற்பரப்பில் மிஷன் கப்பல் மீதான தாக்குதலின்போது கைது செய்யப்பட்டு விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஏழு பேரில் ஒருவர் நேற்று விடுதலைப் புலிகளினால் விடுவிக்கப்பட்டுள்ளார் என்று வவுனியா செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தோனேஷியக் கப்பலான மிஷன் கப்பல் தாக்கப்பட்ட போது ஏழு பேர் விடுதலைப் புலிகளினால் கைது செய்யப்பட்டனர். இவர்களில் இரங்கசாமியுவனதாஸ் என்பவர் மனிதாபிமான அடிப்படையில் விடுவிக்கப்பட்டுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர் இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் வைத்து விடுதலைப்புலிகளினால் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டார். அவர் இன்று இவரது சொந்த இடத்துக்கு அழைத்துச் செல்லப்படுவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-9-14g)

## சார்க் மாநாடு

'சார்க்' வெளிவிவகாரச் செயலாளர்கள் நிலையியல் குழுவின் 25 ஆவது தொடர் கூட்டம் கொழும்பில் நேற்று ஆரம்பமானது.

(இ-9)



அப்ப இனி கப்பல் வாற நேரம் கண்டு கொள்ள வேண்டியது தான்...!

## அம்பாறையில் வெள்ளம்

வவுனியா, ஜூலை 26

அம்பாறை மாவட்டத்தில் கடந்த இரு வாரங்களாகத் தொடர்ந்து பெய்து வரும் மழையினால் 16 ஆயிரம் ஏக்கர் நெல்வயல்கள் வெள்ளத்தில் மூழ்கி உள்ளன.

அறுவடை செய்ய வேண்டிய நிலையில் இருந்த நெல் வயல்களே இவ்வாறு வெள்ளத்தில் மூழ்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை அம்பாறை மாவட்டத்தின் புத்தானை என்ற இடத்தில் அறுவடை செய்யப்பட்ட நிலையில் இருந்த நெல் மூடைகளை வெள்ளம் அடித்துச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(இ-7)

# புல்மோட்டை கடற் பகுதியில் 2½ மணி நேரம் கடும் மோதல்!

கொழும்பு, ஜூலை 26

புல்மோட்டை கடல் பகுதியில் வெள்ளி நள்ளிரவு விடுதலைப் புலிகளின் படகுகளுக்கும் கடற்படையினரின் படகுகளுக்கும் இடையில் இரண்டரை மணிநேரம் மோதல் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொக்குளாய்க்குச் சமீபத்தில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இரண்டு கடற்படைப் படகுகள் விடுதலைப் புலிகளின் படகுகளை அவதானித்த பின்னர் இந்த மோதல் இடம்பெற்றது என்றும் —

ஏனைய கடற்படைப் படகுகளும் உஷார் படுத்தப்பட்டதுடன் அவை விடுதலைப் புலிகளின் படகுகளைத் தாக்கத் தொடங்கின என்றும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை தலைமையகம் தெரிவித்தது.

வெள்ளிக்கிழமை இரவு 12.20 க்கு இந்த மோதல் ஆரம்பமானது.

நேற்று அதிகாலை 3 மணிவரை மோதல் தொடர்ந்து இடம்பெற்றுள்ளது.

விடுதலைப் புலிகள் கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தி கடற்படையினரைத் தாக்கினார்கள் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

(இ-9)

## கப்பல்சேவை 1ஆம் திகதி நடைபெறவாய்ப்பு இல்லை

திருகோணமலை ஜூலை 26

திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை அடுத்த மாதம் 7 ஆம் திகதியே ஆரம்பமாகும் என திருமலைப்பட்டணமும் சூழலும் பிரதேச செயலர் எஸ். வேலும்மயிலும் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார்.

இந்தக் கப்பல் சேவை அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் ஆரம்பமாகும் என முன்னர் எதிர்பார்க்கப்பட்டதாகவும் —

எனினும் பயணிகள் சேவை

(10 ஆம்பக்கம் பார்க்க)

## புனித யாகப்பர் ஆலய உற்சவம் பாதிப்பு

குருநகர், ஜூலை 26

குருநகர் புனித யாகப்பர் ஆலய வருடாந்த திருவிழாவின் திருநாள் திருப்பலி நேற்றுக் காலை திட்டமிடப்பட்டவாறு நடத்தப்பட

(10 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை ஆஸ்பத்திரியில் நேற்று வேலை நிறுத்தம்

திருகோணமலை, ஜூலை 26

திருகோணமலை வைத்திய சாலையைச் சேர்ந்த டாக்டர்கள் மற்றும் தாதிமார்கள், சிற்றூழியர்கள் நேற்று அடையாள வேலை நிறுத்தம் செய்தனர்.

நேற்றுக்காலை 9 மணிக்கு ஆரம்பித்த வேலை நிறுத்தம் நண்பகல் 12 மணி வரை நீடித்தது.

மேற்படி வைத்தியசாலையில் நிர்வாக உத்தியோகத்தரின் செயற்பாடுகளைக் கண்டித்தே இந்த அடையாள வேலை நிறுத்தம் நிகழ்த்தப்பட்டதாகத் தெரி

(10ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமனிதர்

## அமரர் கனகராசா

அவர்களின் திருவடிகளுக்கு

## எமது கண்ணீர்க் காணிக்கை



''நன்றே செய்க அதனையும் இன்றே செய்க'' மனிதாபிமானம், சமுதாய நேயம், தூயசைவ வாழ்வு அனைத்தையும் தன்னகத்தே கொண்ட சிவதர்ம வள்ளல் அமரர் க. கனகராசா அவர்களுக்கு எமது இதய அஞ்சலி கூறிப் பிரார்த்திக்கின்றோம்

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

(57875)

---

## கண்ணீர் அஞ்சலி

மில்க்வைற்

### கனகராஜா ஜே. பி.

அவர்கள்

செவிப்புலன் வலுவற்றோர் (Rood) நிறுவனத்தில் உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்புக்கொடுத்தும் தளபாட உதவிகள், சரீர உதவிகளுடன் இன்னும் பல வகையான உதவிகள் செய்தும் உள்ளார். இவர் இறந்த செய்தி கேட்டு ஆறாத் துயரடைவதுடன் இவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், செயலாளர்,
பொருளாளர், அங்கத்தவர்கள்
செவிப்புலன் வலுவற்றோர்
புனர்வாழ்வு நிறுவனம்.

426, கே. கே. எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.

(57879)

---

## இதய அஞ்சலி

### க. கனகராசா

இமய ஜோதி சுவாமி சிவானந்தரின் அருட் கட்டளைகளையே வாழ்வில் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்த நமது பாடசாலையின் போஷகரான மில்க்வைற் சோப் அதிபரின் மறைவு எம்மை வேதனைக்குள்ளாக்கியது.

அவரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கிறோம்.

சிவானந்தா சிறுவர் சமய பாடசாலை
ஆசிரியர்களும், பொறுப்பாளர்களும்,
மாணவர்களும்.

(57873)

---

## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு:
13 – 05 – 1956

உதிர்வு:
06 – 08 – 1997

அமரர்

### தம்பிராசா இராசரத்தினம்

ஓராண்டு ஓடி மறைந்ததுவோ ஐயா நீ
பாராண்டு வாழ்வாய் என்றிருந்தோம் எம்கண்ணை
நீராளச் செய்து விட்டு நீ எங்கு சென்றாய்?
மாறாது உன் நினைவால் வாடுகின்றோம்
மறைந்திடுமோ உன் நினைவு எம்மை விட்டு.

தாய்: த. நல்லம்மா
மனைவி: இ. வரதநாயகி
சகோதரங்கள்: இ. இந்திராணிதேவி,
த. இராசேந்திரம், த. சுசீலாதேவி,
த. மனோகரி, த. இராஜமோகநாதன், த. [illegible]தாஸ், த. தெய்வேந்திரம், த. சிவஞானம்.

(சி/4389)

---

## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.

இன்று மட்டும்
முரளி, தேவயானி
**பூந்தோட்டம்**
திங்கள், செவ்வாய்
விஜய் நடித்த
**ப்ரியமுடன்**
நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)
Tele. No: 070 – 212223

(57502)

---

## ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம்.

கமல் (இரு வேடம்)
மொனிஷா, சுகன்யா,
கவுண்டமணி, செந்தில்
நடித்த
**இந்தியன்**
தினசரி
10-30 — 2-00, 5-00
(புதிய நேரம்)

(சி/4336)

---

## நாகம்ஸ்

சினிமா
சுன்னாகம்.

அகல வெண் திரையில் ஒன்பது வருட இடைவெளியின் பின் மீண்டும் திரைப்படக் கூட்டுத்தாபன (ரீல்ஸ்) படங்கள் காண்பிக்கப்படுகின்றன.

சுப்ப ஸ்டார் ரஜனி
மீனா – செந்தில்,
வடிவேல் நடித்த
**முத்து**
(சினிமாஸ்கோப)
காட்சிகள்:- 10-30, 2-30

(57858)

---

## சிவா

திரையரங்கு
சிவன் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

மம்முட்டி
நடிக்கும்
**உண்மை**
(புதிய வெளியீடு)
தினசரி:- 10-30, 2-30

(சி/4391)

---

## வாழ்த்துகின்றோம்

கலாபூஷண விருது பெற்று கௌரவிக்கப்பட்ட அளவெட்டியைச் சேர்ந்த

### திரு. முருகேசு வர்ணகுலசிங்கம்

அவர்கள்

சகல நலன்களுடன் நீண்ட காலம் இசைச் சேவை புரிய இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

பழைய மாணவிகளும்,
பெற்றோரும்
நல்லூர்.

(57874)

---

## தேவை

ஆங்கில தட்டெழுத்தாளர் (Typist) மொழிபெயர்ப்பு செய்யக்கூடியவர் ஆண் தேவை.

தொடர்பு:
**மருதம்
என்ரபிறைசஸ்**
இல: 66,
மணிக்கூட்டு வீதி,
(ஆஸ்பத்திரி முன்பாக)
யாழ்ப்பாணம்.

(57866)

---

# மரண அறிவித்தல்கள்

## சண்முகம் கார்த்திகேசு

புங்குடுதீவு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட முன்னாள் நுவரெலியா பிரபல வர்த்தகர் சண்முகம் கார்த்திகேசு அவர்கள் 25 - 07 - 98 சனிக்கிழமை மாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருமதி பொன்னம்மாவின் அன்புக் கணவரும், கனகசபை (இளைப்பாறிய அதிபர்), கனகாம்பிகை (பிரான்ஸ்), இந்திராணி (ஆசிரியை, காசிப்பிள்ளை வித்தியாலயம், கல்வியன்காடு), தனபாலசிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர் – சுவிஸ்), குகபாலன் (தலைவர், புவியியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம்), லோகநாதன் (ஆசிரியர்– ஜேர்மனி), திருநாவுக்கரசு (பிரதி அதிபர், நோர்வூட் மகாவித்தியாலயம், நோர்வூட்), ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி க. அன்னப்பிள்ளை (இளைப்பாறிய அதிபர்), கா. க. கனகசுந்தரம் (இளைப்பாறிய அதிபர்), சி. சண்முகநாதன் (இளைப்பாறிய அதிபர்), த. தனலக்சுமி (ஆசிரியை, யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), கு. கோகிலாதேவி (இந்தியா), லோ. காஞ்சனா (ஜேர்மனி), தி. ஜெயலக்சுமி (ஹட்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற இ. மயில்வாகனம், காலஞ்சென்ற இ. தம்பிப்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர்), குலசேகரம் பிள்ளை (கொழும்பு), காலஞ்சென்ற நல்லதம்பி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற ச. பொன்னையா, காலஞ்சென்ற ச. சொக்கலிங்கம் (இளைப்பாறிய அதிபர்), ந. சிவக்கொழுந்து ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26-7-98) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் 27/6 வைமன் வீதியிலுள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்துக்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி இ. சண்முகநாதன்
(ஆசிரியை, காசிப்பிள்ளை வித்தியாலயம் கல்வியங்காடு)
கலாநிதி கா. குகபாலன்
(தலைவர் புவியியற்துறை யாழ். பல்கலைக்கழகம்)

27/6 வைமன் வீதி,
யாழ்ப்பாணம்.

(57881)

---

திருமதி

## FLORY அன்னறட்ணம் துரைச்சாமி

உடுவிலைப் பிறப்பிடமாகவும், ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி FLORY அன்னறட்ணம் துரைச்சாமி அவர்கள் 25. 06. 98 இல் ஆஸ்திரேலியாவில் காலமானார்.

அன்னார் திருநெல்வேலியைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னத்தம்பி துரைச்சாமி (இளைப்பாறிய இலங்கை வங்கி, கிளை முகாமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும், Dr. து. சூரியபாலன் (கனடா), திருமதி கௌரிதேவி DODO தம்பாப்பிள்ளை (ஆஸ்திரேலியா), திருமதி காஞ்சனாதேவி சிறீதரன் ஆஸ்திரேலியா) அவர்களின் அன்புத்தாயாரும், திருமதி விமலராணி சூரியபாலன் (கனடா), திரு DODO தம்பாப்பிள்ளை (ஆஸ்திரேலியா), திரு. சோ. சிறீதரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், உடுவிலைச் சேர்ந்த திரு சண்முகம் குகபாஸ்கரன் (இலங்கை வங்கி, சுன்னாகம்), திரு சண்முகம் ஜெயபாஸ்கரன் (DUBAI) அவர்களின் அன்புச் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் ஆஸ்திரேலியா சிட்னியில் 29. 06. 98 இல் நடைபெற்றன.

தகவல்:
க. குகபாஸ்கரன்

Mrs. Kanchana Sritharan,
14, Hawkes – Worth Place,
Cherry Broke.
Sydney – N. S. W. – 2126,
Australia.

(57877)

---

திருமதி

## சதயலட்சுமி மனோரஞ்சன்

அராலி வடக்கைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சதயலட்சுமி மனோரஞ்சன் 25-07-1998 இல் காலமானார்.

அன்னார் குலக்கொழுந்து — பொன்னு தம்பதிகளின் அன்பு மகளும், மனோரஞ்சனின் (இளைப்பாறிய ஆசிரியர், யாழ். இந்துக் கல்லூரி) அன்பு மனைவியும், சஞ்சீவன், சுரேக்கா, (ஆசிரியை, கொக்குவில் கிழக்கு, நாமகள் வித்தியாசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26-07-98) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அச்சக ஒழுங்கை, கொக்குவில் கிழக்கில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகக் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்:
மனோரஞ்சன்
(கணவர்)

அச்சுக்கூட ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு.

(57780)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

# தமிழர்களின் ஒற்றுமைக் குறைவை நீக்க

# தமிழ் நெடுங்கணக்கில் மாற்றம் தேவையா?

## எண்சோதிடம் கருதி எழும் சிந்தனை

இலக்கியச் சிறப்பு, இலக்கியவளம், இலக்கண வரம்பு, இனிமை, சொல்வளம், இன்னும் இன்னோரன்ன பல வளமும் கொண்டு விளங்குவது செந்தமிழ்மொழி. தமிழ் நெடுங்கணக்கில் அல்லது தமிழ் அரிச்சுவடியில் 247 எழுத்துக்கள் உள்ளன.

இந்த எழுத்துக்கள் அதிகமாக இருப்பதால் தமிழைக் கற்பதில் கடினம் இருப்பதாகச் சிலர் கூறுகின்றனர். இது ஒரு பொருத்தமான கருத்தல்ல. தமிழ் மொழியின் இலக்கண நுட்பங்களை நன்றாக விளங்கிக் கொண்டால் இந்தக் கூற்றுப் பிழையானது என்பதை அறியலாம்.

தமிழில் 12 உயிர் எழுத்துக்கள், 18 மெய்யெழுத்துக்கள், 216 உயிர் மெய் எழுத்துக்கள், ஆய்த எழுத்து ஒன்று என மொத்தம் 247 எழுத்துக்கள் உண்டு. இதில் உயிரும் மெய்யும் சேர்ந்து உண்டாகுபவை 216 (உ+ம்-க் + அ = க; க் + ஆ = கா) இவை உயிர் மெய் எழுத்துக்கள். ஆங்கில அரிச்சுவடிப்படி நோக்கினால் ஆங்கிலத்தில் உயிர் எழுத்துக்கள் 5 உண்டு. (A,E,I,O,U) குறிலுக்கும் நெடிலுக்கும் வெவ்வேறான எழுத்துக்கள் ஆங்கிலத்தில் கிடையாது. ஆனால் தமிழில் குறில் 5 உம் (அ, இ, உ, எ, ஒ); நெடில் 7 உம் (ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ) உண்டு. இனி ஆங்கிலத்தில் உயிர்மெய் எழுத்துக்கள் இல்லையெனினும் தமிழில் 'கா' என்ற உயிர் மெய் எழுத்தைக் குறிப்பதற்கு 'KA' என்று இரண்டு ஆங்கில எழுத்துக்களை உபயோகிக்கின்றோம். இதே போல் தமிழ்ச் சொற்களை ஆங்கிலத்தில் அப்படியே எழுத்துக்களால் எழுதும் போது தமிழ் எழுத்துக்களை விட ஆங்கிலத்தில் எழுத்துக்கள் அதிகமாகவே தேவைப்படும் (உம் - முருகன் - MURUGAN) ஆங்கிலத்தில் உயிரும் மெய்யும் தனித்தனி வருகின்றன. எனவே ஆங்கில முறைப்படி நோக்கினால் தமிழுக்கு 26 எழுத்துக்கள் மட்டும் தான் வரும், (குறில் 5 + மெய் 18 + ஐ + ஔ + ஆய்தம்) இதிலும் (ஐ) க்குப் பதிலாக "அய்" எனவும் "ஔ" வுக்குப் பதிலாக "அவ்" எனவும் பயன்படுத்தினால், 24 எழுத்துக்கள் மட்டும் தான் தமிழ் மொழிக்குரிய எழுத்துக்களாகலாம். (குறில் 5+ மெய் 18+ ஆய்தம்)

பழந் தமிழர் எழுத்தாணிகளால் ஓலைச் சுவடிகளில் எழுதியதால், இடச் சுருக்கம், உழைப்புச் சுருக்கம், காலச் சுருக்கம் கருதி மெய் எழுத்துக்களிலிருந்தே உயிர் மெய் எழுத்துக்களையும் உருவாக்கிக் கொண்டனர். இந்த அடிப்படையில் தமிழில் உள்ள உயிர் மெய் எழுத்துக்களைத் தனி வடிவங்களாகக் கருதுதல் கூடாதெனத் தமிழறிஞர் பலரும் கருதுகின்றனர்.

தமிழ் அரிச்சுவடியில் உயிரெழுத்துக்களில் குறில், நெடில் எனத் தனித்தனி இருப்பது உச்சரிப்புக் குறைபாடில்லாமல் மொழியைக் கற்பதற்கு உதவியாக இருக்கின்றது எனக் கொள்ளலாம். ஆங்கிலத்தில் குறில்; நெடில் பேதம் இல்லாததனால், உச்சரிப்பு வேறுபாடு நாட்டிற்கு நாடு வேறுபடுகிறது. கற்பதற்கும் இடர்ப்பாடாகவுள்ளது. உதாரணத்திற்கு Water என்ற ஆங்கிலச் சொல் நாட்டிற்கு நாடு உச்சரிப்பில் வேறுபடுவதைக் காணலாம். இராச கோபாலச் சாரி என்ற பெயரை ஆங்கிலத்தில் எழுதினால்-பலரும் வெவ்வேறு விதமாக வாசிப்பர். இவற்றிலிருந்து தமிழ் அரிச்சுவடி அமைப்பு, ஆற்றொழுக்குப் போன்ற தமிழ் மொழியின் நீர்மைக்கு எவ்வளவு உடன் பாடாய் உள்ளதென்பதை உய்த்து உணரலாம்.

தமிழ்மொழியில் 12 உயிர் எழுத்துக்களிருப்பது, மொழி செப்பமுற்றிருப்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். 18 மெய் எழுத்துக்கள் இருப்பது தமிழில் வழங்கும் சொற்களுக்கு அடிப்படையானதாகும். ல, ள, ழ, பேதங்களும் ர, ற பேதங்களும்; ன, ண, ந பேதங்களும் தமிழின் உச்சரிப்புத்தனித்தன்மையையும்; சொற் பொருட்சுவையையும் உச்சமாகப் பிரதிபலிப்பவையாகும்.

### சொற்சிறப்பு

எழுத்துச்சிறப்பு மட்டுமன்றிச் சொற்சிறப்புமுடையது எங்கள் தமிழ் மொழி. தமிழில் உள்ள சொற்களில் சில 7 எழுத்துக்களையும் பல 5 எழுத்துக்களையும், மிகையானவை 4, 3, 2 எழுத்துக்களையும் கொண்டவை. ஓர் எழுத்துச் சொற்களான, ஆ, ஈ, கோ, தா, தை, பை, போ, மை, வை, தீ, நா, பூ, வா, என்பவையுமுண்டு. இவற்றை விடப் பிறமொழிச் சொற்கள் உருவத்தை மட்டுமே காட்டி நிற்க, தமிழ் மொழிச் சொற்கள் உருவத்தையும் பருவத்தையும் காட்டுவதோடு சிலவேளைகளில் வண்ணத்தையும் காட்டுவனவாகவுள்ளன.

'பெண்' என்பதற்கு ஆங்கிலத்தில் 'Woman' என்றும் வடமொழியில் 'ஸ்திரீ' என்றும் கூறுவர், ஆனால் தமிழில் பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண், மூதாட்டி, கிழவி' என்று பெண்ணின் உருவம் பருவம் ஆகியவற்றைக் காட்டுவனவாகச் சொற்கள் அமைந்துள்ளன. இது போன்று இன்னும் பல உதாரணங்களைக் காணலாம்.

உருவம், பருவம், வண்ணம் ஆகியவற்றைக் காட்டும் சொற் கூட்டங்களும் உண்டு. உதாரணமாக, உருவம் 'இலை' யாக இருப்பினும் அது "கொழுந்" தென்றால் சாம்பல் வண்ணமாகவும், 'தளிர்' என்றால் — கபில வண்ணமாகவும், 'இலை' என்றால் பச்சை வண்ணமாகவும், 'பழுப்பு' என்றால் மஞ்சல் வண்ணமாகவும் 'சருகு' என்றால் சிவப்பு வண்ணமாகவும் இருக்கும்.

இவற்றிற்கு மேலாக தமிழ் மொழியில் பல பொருள் குறிக்கும் ஒரு சொல் என்றும், ஒரு பொருள் குறிக்கும் பல சொல் என்றும் சொற்கள் உண்டு. மேற்கூறிய சொல்வளம் பிறமொழிகளுக்கு இல்லை. அத்தோடு இனிமை நலமும் இல்லை. இதனாலேயே பலமொழிகளையும் கற்றறிந்த பாரதியார் "தமிழ் மொழி போல் இனிதாவ தெங்கும் காணோம்" என்று பாடினார். பிறநாட்டுப் பேரறிஞர்கள் பலர் தமிழ் நாட்டிற்கு வந்து தமிழ் கற்றுத் தம்மையே மறந்து தமிழிற் றிழைத்து மகிழ்ந்தனர். "நான் ஒரு தமிழ் மாணவன்" என்று தமது கல்லறையில் எழுத வேண்டும் என்று பணித்து மரணமடைந்தார் ஐரோப்பிய தமிழ் அறிஞர் G. U போப்பையர் என்றால் தமிழ் மொழியின் தனிச் சிறப்பிற்கு மேலும் சான்றுகள் வேண்டுமோ!

### இப்படி ஒரு சிந்தனை

உலக வழக்கு அழிந்தொழிந்து சிதையாத சீரிளமைத் திறந்தோடு, என்றுமுள செந்தமிழாய், எங்கள் மொழி வாழ்ந்தாலும், எம்மின மக்கள் குண்டுகளுக்கு இலக்காகியும், எறிகணைக்குட்பட்டும், தடியுதை உண்டும், காலுதை பெற்றும், கயிற்றடி ஏற்றும், வருந்தி வாடுவதும், மாய்ந்து அழிவதும், காணாமற்போவதும், பெண்கள் கற்பழிக்கப்படுவதும், பசியாற்சாதலும். பிணியாற்சாவதும், கொலையால் அழிவதும், நிம்மதியற்ற, நெஞ்சு பொறுக்காத நிகழ்வுகள் ஆகிவிட்டன.

மூவேந்தர் காலந்தொட்டு நாம் முட்டி மோதி அந்நியரின் ஆட்சிக்குட்பட்டுக் கண்ணியம் இழந்து, இன்றும் குழுக்களாகவும், கட்சிகளாகவும் பிரிந்து இனத்தின் தனித்துவத்தை இழந்து சொந்த நலன்களிலேயே சிந்தனை கொண்டு நிற்கின்றோம். "தாடி எரியும் போது பீடிக்கு நெருப்புக் கேட்பதுபோல" வாடிவதங்கும் எம்மக்களின் துயர் போக்களண்ணாது ஓடி ஓடிப் பதவிதேடுவதிலும் பட்டம் பெறுவதிலும் கண்ணுங் கருத்துமாக இருக்கின்றோம்.

தன்னைப் பெற்ற ஆத்தாள் கிண்ணிப்பிச்சை எடுக்கத் தனயன்மார், தலை

(8 ஆம் பக்கம் பார்க்க)

நா. க. சண்முகநாதபிள்ளை

## எதிரொலி

- "ஓஷன் கரியர்" கப்பலுக்குள்ளே கடல் நீர் புகுந்து விட்டது!
- ★ கப்பலின் பெயர் "கடல் நீரைக் காவும் வாகனம்" என்பது தானே!
- தொலைத் தொடர்பு நிலையம் குண்டுத் தாக்குதலுக்குள்ளானதிற் பலர் படுகாயம் அடைந்துள்ளனர்.
- ★ கொலைத் தொடர்பு நிலையம் என்று சொல்வதுதான் சரியாக இருக்குமோ?
- பிரபல அரசியல் வாதிகள் சிலர், பாதாள உலகக் கும்பலுடன் தொடர்பு வைத்துள்ளனர்.
- ★ நாட்டில் இருப்பது நாடாளுமன்ற ஜனநாயகமா அல்லது பாதாள மன்றப் பண நாயகமா?
- காவிரி நதி நீர்ப் பிரச்சினை சம்பந்தமாக மத்திய அரசு நீதியான நடவடிக்கையை எடுக்காவிட்டால், பயங்கரமான விளைவுகள் ஏற்படும் என ஜெயலலிதா அறிவித்துள்ளார்!
- ★ மத்தியிலுள்ள கூட்டரசு சுய லலிதா என்ற நிலை ஏற்படப் போகின்றதோ?
- கொழும்பு—காங்கேசன்துறைக் கப்பற் சேவையில் ஈடுபடவுள்ள கொறியா நாட்டுக் கப்பல், இலங்கையின் தேசியக் கொடியையே பறக்க விட வேண்டும் என இலங்கை அரசு பிடிவாதம் பிடிக்கின்றது.
- ★ இரவல் புடைவையில் இது நல்ல 'கொய்யகம்' என்பது இதைத்தானோ?
- யாழ்ப்பாணத்திற் பல இடங்களில் இரவு வேளைகளிலே திருட்டுக்கள் அதிகரித்து வருகின்றன.
- ★ இருட்டும், திருட்டும் கைகோத்துச் செல்கின்றன.
- மாகாண சபைத் தேர்தலுக்காகப் போர்முனையிலிருந்து வீரர்கள் அழைக்கப்பட்டால், போர் சம்பந்தமான பொறுப்புக்களிலிருந்து விலகப் போவதாக அனுருத்த அறிவித்துள்ளார்.
- ★ வோட்டு முறையைவிட, வேட்டு முறையிலே தான் அதிக நாட்டமோ?
- அணு ஆயுதத்தடை ஒப்பந்தத்தின் இப்போதைய வடிவில் அதிற் கையெழுத்திடுவதில்லை என இந்தியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.
- ★ அதாவது இந்தியா, தன் நிலையிலிருந்து 'அணு' அளவும் இறங்காது.

— இடியன்

# புலமைப்பரிசில்பரீட்சை மாணவருக்கு!

அன்புள்ள தம்பிக்கு,

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த ஐந்தாம் ஆண்டுப்புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் ஒன்பதாம் திகதி நடைபெறும் என்பதை அறிந்தபின் உங்கள் உள்ளங்களில் மிகுந்த பரபரப்பு ஏற்பட்டிருப்பதை அறியக்கூடியதாயுள்ளது.

கடந்த ஒரு வருடமாகவே நீங்கள் புலமைப்பரிசில் பரீட்சைக்கான ஆயத்தங்களில் தீவிரமாகவும், ஆர்வமாகவும் ஈடுபட்டு வந்துள்ளீர்கள். அதற்காக நீங்கள் "ரியூட்டரி"கள் தோறும் அலைந்து திரிந்து படித்தீர்கள். 'புலமைப்பரிசில் புகழ்' எனப் பெயர் சூட்டிக் கொண்ட சில ஆசிரியர்களைத் தேடிப் பல கிலோ மீற்றர் தூரத்திற்கு பஸ்ஸிலோ, சைக்கிள் வண்டிகளிலோ சென்று கற்று வந்தீர்கள்.

"அக்கரைச் சக்தி"

[illegible] போதாதென்று மூன்று நாலு பேரிடமும் கற்று சிலவேளை உங்களையே குழப்பியுமிருக்கிறீர்கள். பாடசாலையில் கற்ற நேரத்தைவிட வெளியிலேயே அதிக நேரத்தைக் கற்றலுக்காகச் செலவிட்டுள்ளீர்கள். அதுமட்டுமா? புலமைப்பரிசில் பரீட்சையின் மாதிரி வினாத்தாளை வெளியிட்டுப் பயிற்சிக்கு நல்ல வாய்ப்பளித்த சில கல்வி நிலையங்களின் வெளியீடுகளை முறையாகச் செய்து பயின்றுள்ளீர்கள். கொழும்பில் இருந்து வெளிவரும் சில மாதிரிப் பயிற்சிகளையும் செய்து கைகளுக்கும், மனத்திற்கும் நிறைந்த பயிற்சி கொடுத்துள்ளீர்கள். அருமையான பயிற்சி நூல் ஒன்றையும் ஆர்வத்துடன்வாங்கி மேலும் பயிற்சிகளில் ஈடுபட்டுத் திளைத்தீர்கள்.

இதற்குப் பின்னரும் உங்களுக்கு பரீட்சைப் பயம் இருக்குமென நான் எண்ணவில்லை. 'ரியூட்டரிகளிலும் தனிப்பட்ட ஆசிரிய ஆசிரியைகளிடமும் நீங்கள் பயிற்சி பெற்ற போது தவறாக விடை எழுதிக்குறைந்த புள்ளிகள் எடுத்தமைக்காக நீங்கள் அங்கும், பின்பு வீட்டிலும் வாங்கிய அடிகளும் ஏச்சும் பேச்சும் தான் எத்தனை?

### வீங்கிப் பருத்த பாடத்திட்டம்

நீங்கள் குழந்தைகள் என்பதை மறந்து உங்கள் சிறிய மூளையின் கொள்ளளவுக்கு மிஞ்சியதாக ஏராளமான விடயங்களை எப்படியோ புகுத்திவிட வேண்டுமென்ற எண்ணத்தினால் மட்டுமல்ல பரீட்சையைச் சிறப்பாகச் செய்ய வைக்க வேண்டும் என்ற நோக்கத்தாலுமே இவ்வாறு சில துன்பங்களையும் நீங்கள் சந்திக்க நேர்ந்தது. எமது தற்போதைய கல்வித்திட்டத்திலுள்ள குறைபாட்டின் காரணமாக ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பாடத்திட்டம் அளவுக்கு மிஞ்சி வீங்கிப் பருத்துள்ளது. இதை மாற்ற வேண்டும் என்பதே கல்விமான்களின் எண்ணமாகும்.

பொது அறிவிலும், உளவியல் ரீதியான விடயதானங்களிலும், நுட்பமான முறையில் பிரச்சினைகளை அணுகும் செயல் முறையிலும் உங்களுக்கு இப்போதிருக்கும் அறிவில் நூறிலொரு பங்கு கூட அப்போது நாங்கள் 5 ஆம் வகுப்பில் கற்கும்போது இருந்திருக்குமா என்பது சந்தேகமே! அதன்படி எங்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### வீடுவளவு விற்பனைக்கு

நன்னீர்க் கிணற்றுடன் அமைந்த சகல வசதிகளையும் கொண்ட 5 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 98/2, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்திச் சந்தி. [57859]

### விற்பனைக்கு

உயர்ரக புறொயிலர் கோழிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 101, பலாலிவீதி, (இலுப்பையடிச்சந்தி அருகில்) கந்தர்மடம், யாழ்ப்பாணம், வாடிக்கையாளர்களுக்கு சலுகை உண்டு. (57819)

கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட பலவர்ண கலர் மீன்கள் விற்பனைக்கு உண்டு. இல. 131 (251), அரசடி றோட், கந்தர்மடம் சந்தி அருகில், யாழ்ப்பாணம். (57848)

நல்ல நிலையிலுள்ள தமிழ் ரெமிங்டன் தட்டச்சு இயந்திரமும், ஆங்கில ஒப்டிமா (Optima) தட்டச்சு இயந்திரமும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: R. மருதலிங்கம், 8/1, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். [57860]

### தவறிவிட்டது

சோமசுந்தரம் சிவகணேசன் என்பவரது தேசிய அடையாள அட்டையும் (732171312V), விசேட அடையாள அட்டையும் 24-07-98 அன்று ஆஸ்பத்திரி வீதியில் இருந்து முனியப்பர் வீதி ஊடாக சினோர் முகாமுக்கு இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சிற்றி போய் ரெயிலர்ஸ், சிவன்பண்ணை வீதியில் ஒப்படைக்கவும். [57865]

### தேவை

நல்ல நிலையில் உள்ள ஓடுகளும், முகட்டு ஓடுகளும் உடனடியாகத் தேவை. 23, கச்சேரி நல்லூர் றோட், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (57836)

### வீட்டுப் பொருள்கள்

வரவேற்புஅறை, படுக்கையறை, சமையல்அறை, பாவனைக்குரிய பொருள்கள், தளபாடங்கள், பாத்திரங்கள், உபகரணங்கள் விற்பனைக்கு உண்டு. இன்று ஞாயிறும் நாளையும் பார்வையிடலாம். 42, ஆசீர்வாதம் ஒழுங்கை, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். (57840)

### மிருதங்கம்

புதிய மிருதங்கங்கள் விற்பனைக்கு உண்டு. திருத்த வேலைகள் சிறந்த முறையில் குறித்த தவணையில் செய்து தரப்படும். கோ விஜயகுமார், 192/1, நாவலர் வீதி, (பெருமாள் கோவிலடி) யாழ்ப்பாணம். (57720)

### சேவல் குஞ்சுகள்

பகிரா பிறவுண் சேவல் குஞ்சுகள்உடன் விற்பனைக்கு உண்டு. விலை 25 ரூபா மட்டுமே. மல்லிகாபதி, சந்தை முன்ஒழுங்கை, மானிப்பாய். (57849)

### இறைச்சிக்கோழி

குறைந்த விலையில் புறொயிலர், கல்பேட் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். ஞாயிறு தினங்களில்அரைக் கோழியும் பெற்றுக்கொள்ளலாம். 54/2, சந்தனமாதா கோவில் முன் ஒழுங்கை, கொழும்புத்துறை வீதி, பாண்டியந்தாழ்வு, யாழ்ப்பாணம். (57820)

இறைச்சிக்கோழி (Broilers) கல்பேட்ஸ் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: 15, 6-ம் குறுக்குத்தெரு. யாழ்ப்பாணம் (சின்னக்கடைக்கு அண்மையில்) (57779)

## வீடு விற்பனைக்கு

கட்டைப்பிராயில் பருத்தித்துறை வீதியில் இருந்து 100 மீற்றர் தொலைவில் 3 பரப்புக் காணியில் 5 அறைகள், நவீன குளியலறை வசதி, சுற்றிவர மதில், முற்றம் முழுக்க சிமெந்து தரையிடப்பட்ட வீடு காரியாலயமாகவும் பாவிக்கலாம். வாங்க விரும்புவோர்,

தொடர்பு:

V. T. நாதன்
48, டேவிட்சன் வீதி,
பம்பலப்பிட்டி,
T. P. 585237.

க. நித்தியானந்தன்
வீரபத்திரர் கோவிலடி
கல்வியங்காடு.

(57857)

## பிரார்த்திக்கின்றோம்

சமுதாயப் பிரக்ஞையுடன் வாழ்வாங்கு வாழ்ந்த
சிவதர்ம வள்ளல்


**க. கனகராசா (ஜே. பி.)**

இறையெய்தியமையை நினைந்து அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

சன்மார்க்க சபையினர்.

குரும்பசிட்டி. [57862]

## வாழ்த்துகின்றோம்



கைதடி ஸ்ரீ சச்சிதானந்தா ஆச்சிரமத்தின் தலைவரும், ஸ்ரீ சச்சிதானந்தா என்ரபிறைசஸ் உரிமையாளருமான

**திரு. இராமலிங்கம் குழந்தைவடிவேலு**

அவர்கள் அண்மையில் சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டதை ஸ்ரீ சச்சிதானந்தா என்ரபிறைசஸ் ஊழியர்கள் மனதார வாழ்த்துகிறார்கள்.

இன்டஸ்றீஸ் ஊழியர்கள்
ஸ்ரீ சச்சிதானந்தா என்ரபிறைசஸ்,
கைதடி. ( 57843 )

கணபதி துணை

## வாழ்த்துகின்றோம்

எமது பாலர் ஞானோதய சபையின் இசைக் கல்லூரியில் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக சேவை செய்து நூற்றுக்கணக்கான மாணவர்களை மிருதங்க விற்பன்னர்களாக உருவாக்கிய

மயிலிட்டியூர்

**திரு. க. ப. சின்னராசா**

அவர்களுக்கு

''கலாபூஷணம்''

விருது வழங்கப்பட்டுள்ளதையிட்டு மனதார வாழ்த்துகின்றோம். காசிவிநாயகர் அன்னாருக்கு நீண்ட ஆயுளை நல்குவாராக.

சி. கணேசலிங்கக்குருக்கள்.
(தலைவர்)

காசி விநாயகர் தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

(57863)

## கண்ணீர் அஞ்சலி

**திரு. எஸ். கைலாசபிள்ளை**

22 – 07 – 98 ஆம் திகதி இறைபதம் அடைந்த யா/ உயரப்புலம் குணபாலன் வித்தியாசாலை ஸ்தாபகரும், பாடசாலை வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியவருமான திரு. எஸ். கைலாசபிள்ளை அவர்களின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தார், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்,
பெற்றோர், பழைய மாணவர்கள்.
யா/ உயரப்புலம்
குணபாலன் வித்தியாசாலை,
ஆனைக்கோட்டை.

(55459)

## கண்ணீர் அஞ்சலி

மில்க்வைற் அதிபர், சிவதர்ம வள்ளல்
கலாநிதி

**அமரர் க. கனகராசா (ஜே.பி.)**

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைகிறோம்.

சிவப்பணி, தமிழ்ப்பணி, சமூகப்பணி, தர்மப்பணி, அபிவிருத்திப்பணி எனப் பல தொண்டு ஆற்றிய அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


தலைவர்,
பணிப்பாளர், பணியாளர்
தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம்

துர்க்காபுரம்,
தெல்லிப்பழை.

(C/4382)

# நினைவஞ்சலி

**14 ஆம் ஆண்டு** — **இரண்டாம் ஆண்டு**



**தா. சின்னத்தம்பி**
(கட்டுவன் - பைங்கிரை)
பிறப்பு 06-11-1907
இறப்பு 11-03-1984



**சின்னத்தம்பி பாக்கியம்**
(கட்டுவன் - பைங்கிரை)
பிறப்பு 07-04-1912
இறப்பு 26-07-1996

விரைந்தீர் இருவீரும் விண்ணுலகை நோக்கி
வரைந்தீர் கோல மொன்று வையகத்தில் சாட்சிக்கு
கரைந்தே நாள்கள் பல காணாமற் போனாலும்
நினைந்தே வாழ்ந்திடுவோம் நீக்கமற எந்நாளும்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்.
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

சி. சற்குணநாதன் (T.A),
தொழில்நுட்ப உதவியாளர்,
பிருந்தாவனம்,
மீசாலை மேற்கு, மீசாலை.

(சி/ 4380)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்நாட்டு/வெளிநாட்டு தொலைபேசி

அழைப்புக்களை

- மிகக் குறைந்த செலவில் —
- எதுவித தாமதமுமின்றி —
- மிகவும் அமைதியான சூழ்நிலையில் —
- சனி, ஞாயிறு உட்பட [சனி, ஞாயிறு தினங்களில் சகாய கட்டணத்துடன்]

பெற நாடுங்கள்:

# துர்க்கா
# தொலைபேசி நிலையம்

86, செம்மாதெரு,
(ஸ்ரான்லி வீதி - வின்சர் தியேட்டர் வீதியிலிருந்து 100 யார் தூரத்தில் — மிகவும் சமீபத்தில்)
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இலக்கம்: 2292

சு. பொ. நடராசா
அதிபர்
அண்ணா தொழிலகம்
இணுவில்.

(57834)

---

# கண்ணீர் அஞ்சலி

சிறந்த சமூக, சமய சேவையாளர்

கலாநிதி

## க. கனகராசா (ஜே. பி)

அவர்களின் மறைவு குறித்து எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

வளர்மதி முன்னேற்றக் கழகம்

சம்பியன் லேன்,
கொக்குவில். (57842)

---

உ
ஓம் நமசிவாய

# ஆழ்ந்த அனுதாபம்

தலை சிறந்த சமூகத் தொண்டரும்,
இந்து சமய சேவையாளரும்,
இயற்கை வள அபிவிருத்தியாளரும்,
கல்விவள மேம்பாட்டாளரும்,
சிவதர்ம வள்ளலாரும்,
மில்க் வைற் தொழிலக அதிபரும்
ஆகிய

கலாநிதி

## க. கனகராசா ஐயா (ஜே. பி.)

அவர்கள் சிவபதமெய்திய செய்தி கேட்டு வதிரி ஸ்ரீ பரமானந்தா ஆச்சிரம சிறார்கள், முதியோர்கள், ஊழியர்கள், தர்மகர்த்தா சபையினர் தமது ஆழ்ந்த அனுதாபங்களை அன்னாரின் குடும்பத்தினருக்குத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

ஸ்ரீ பரமானந்தா
தர்மகர்த்தாக்கள், ஊழியர்கள்,
சிறார்கள், முதியோர்கள்.

வதிரி.
கரவெட்டி. (சி/4374)

---

# 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
13 — 10 — 1969

அந்நியர் அழிப்பு
26 — 07 — 1989

செல்வன்

## பரமகுரு ஸ்கந்தகுமார்

(பழைய மாணவன், நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், ஹாட்லிக் கல்லூரி)

எங்கள் அன்புச் செல்வமே தம்பி! தங்கள் ஆத்ம சாந்திக்கு இறைவனை என்றும் பிரார்த்திக்கும்:

ஐயா, அம்மா, அக்கா,
அத்தான், உறவினர்கள்.

பத்திரகாளி கோயில் வீதி.
பருத்தித்துறை. ([illegible])

---

## இப்படியும் சம்பவம்

நெல்லியடி, ஜூலை 26

வீட்டிலுள்ளோர் உறங்கிய சமயம் பார்த்து அங்கு உட்புகுந்த திருடர்கள் கூட்டில் நின்ற இரண்டு முயல்களை கத்தியால் வெட்டிக்கொலை செய்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு புலோலி கிழக்குசந்தா தோட்டப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

(ஐ-109)

## அனுமதி அட்டைகள்

கொழும்பு: ஜூலை 26

அடுத்த மாதம் 3ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்கள் ஏற்கனவே தபாலில் அனுப்பப் பட்டு விட்டன எனவும் — அனுமதிப் பத்திரம் கிடைக்காதோரை உடனடியாகப் பரீட்சைத் திணைக்களத்தின் பாடசாலைப் பரீட்சை அபிவிருத்திப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறும்— பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பாடசாலைகளில் இருந்து தோற்றும் பரீட்சார்த்திகளின் அனுமதிப் பத்திரங்கள் பாடசாலை அதிபர்களின் விலாசத்திற்கும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் அனுமதிப் பத்திரங்கள் அவர்களின் தனிப்பட்ட விலாசத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என பரீட்சை ஆணையாளர் நாயகம் ஏ. எச். ஆர். பி. அமரக்கோன் தெரிவித்துள்ளார்.

இம்முறை சுமார் 2 லட்சம் பரீட்சார்த்திகள் இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதே நேரம் — யாழ். மாவட்டத்தில் இருந்து இந்தப்பரீட்சைக்குத் தோற்றுபவர்களுக்கான அனுமதி அட்டைகள் நேற்றுத் தபாலில் அனுப்பப்பட்டுள்ளதாக யாழ். கல்வித்திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

(ஐ-10)

## ரதோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூலை 26

அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்பாள் கோவில் இரதோற்சவம் இன்று ஞாயிறு காலை நடைபெறவுள்ளது. 7.00 மணிக்கு வசந்தமண்டப பூசையைத் தொடர்ந்து 9.00 மணிக்கு சுவாமி தேரில் ஆரோகணித்து வலம் வருவார்.

நாளை திங்கட்கிழமை காலை தீர்த்தோற்சவம் இடம்பெறும். [ஐ - 30]

## பரிசளிப்பு விழா

கொழும்புத்துறை, ஜூலை26

சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசமும் புனர்வாழ்வு - கல்வி அபிவிருத்தி நிதியமும் கூட்டாக இணைந்து நடத்தும் 'ஞாபகார்த்தப் புலமைப் பரிசளிப்பு' விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8-30 மணிக்கு நாவலர் மண்டபத்தில் சமாசத் தலைவர் நா. தங்கவடிவேல் தலைமையில் இடம்பெறும்.

## சந்தை புனரமைக்கப்படும்

நெல்லியடி, ஜூலை 26

சகல வசதிகளும் கொண்ட நவீன சந்தையாக நெல்லியடி மரக்கறிச்சந்தை புதிதாக அமைக்கப்படவிருக்கிறது.

வடமராட்சி தெற்குமேற்கு பிரதேசச்சபையின் கீழ் இயங்கி வரும் இச்சந்தை பல வருட காலமாகச் சேதமடைந்த நிலையிலிருப்பதனாலேயே பழைய கட்டடத்தை இடித்து அகற்றி அப்பகுதியில் நவீன வசதிகள் [illegible]

(ஐ-109)

---

வலி-கிழக்கு தென்பகுதி
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## குத்தகை அறிவித்தல்
# வெதுப்பகம்

ஷ சங்கத்தினால் கோப்பாய் வடக்கில் நடத்தி வந்த வெதுப்பகம் குத்தகை அடிப்படையில் வழங்கப்படவுள்ளது. இதனைக் குத்தகைக்குப் பெற பெறவிரும்புவோர் ரூபா 30,000 முற்பணமாகச் செலுத்துதல் வேண்டும். வாடகைக்கான கேள்வியை எதிர்வரும் 15 - 08 - 98 ஆம் திகதிக்கு முன் எழுத்துமூலம் பொதுமுகாமையாளர், வலி-வடக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வெதுப்பகத்திற்கான கேள்விக் கோரிக்கை'' எனக் குறிப்பிடப்படல் வேண்டும். 15 - 08 - 98 ஆம் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

- பொது முகாமையாளர்

நீர்வேலி,
1998 - 07 - 21. (சி/4378)

---

வலி-கிழக்கு தென்பகுதி
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## குத்தகை அறிவித்தல்
# சுவையகம்

ஷ சங்கத்தில் தலைமையகத்துடன் இணைந்த கட்டடத்தில் இயங்கி வந்த சங்க சுவையகம் குத்தகை அடிப்படையில் வழங்கப்படவுள்ளது. முற்பணமாக ரூபா 5,000 செலுத்துதல் வேண்டும். விண்ணப்பிக்க விரும்புவோர் தமது வாடகைக்கான கேள்வியை 15 - 08 - 98 ஆம் திகதிக்கு முன் எழுத்து மூலம் 'பொது முகாமையாளர், வலி-கிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி' என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். தபாலுறையின் இடதுபகக மேல்மூலையில் 'சுவையகத்திற்கான கேள்விக் கோரிக்கை' எனக் குறிப்பிடப்படல் வேண்டும். 15 - 08 - 98ஆம் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

- பொது முகாமையாளர்

நீர்வேலி,
1998 - 07 - 21. (சி/4379)

---

கூட்டுறவுச் சங்கங்கள்
சட்டவிதி–பிரிவு 18(1) இன் கீழ்

## வலி. வடக்கு
## கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்

(வரையுள்ளது)
தெல்லிப்பழை

## விசேட பொதுக்கூட்ட அறிவித்தல்

1998 - 08 - 09

வைத்திலிங்கம் கைலைநாதன் கூட்டுறவுப் பரிசோதகராகிய எனக்கு யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அவர்களால் 1998 - 07 - 15 திகதியிட்ட யா/கூ/அ. 2061 இலக்கக் கடிதமூலம் கூட்டுறவுச் சங்க சட்ட விதி 18 (1) இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் பின்வரும் நிகழ்ச்சி நிரலைக் கொண்ட விசேட பொதுக் கூட்டம் ஒன்று என்னால் அழைக்கப்படுகிறது. தங்களை இக் கூட்டத்திற்கு தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன். கூட்டம் எனது தலைமையில் நடைபெறும்.

இடம். மல்லாகம் மகாவித்தியாலய மண்டபம்
நாள்: 1998 - 08 - 09 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: முற்பகல் 10 மணி ( புதிய நேரம் )

நிகழ்ச்சி நிரல்

1. மௌன இறை வணக்கம்
2. தலைமை உரை
3. தலைமைக்காரியாலய பரிசோதகர் உரை
4. புதிய துணைவிதி ஆராய்ந்து அங்கீகரித்தல்
5. நன்றியுரை

வை. கைலைநாதன்
கூட்டுறவுப் பரிசோதகர்.

கூட்டுறவு அலுவலகம்,
18/10, வைமன் வீதி,
யாழ்ப்பாணம்.
21 - 07 - 1998.

குறிப்பு:

மேற்படி அறிவித்தல் சங்க உறுப்பினர்களுக்கு தனித்தனி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கிடைக்கப் பெறாதவர்கள் சுன்னாகத்தில் அமைந்துள்ள சங்கப் பணிமனையில் தொடர்பு கொள்ளவும்.

(சி/4375)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

**திருமதி கந்தையா பசுபதி**

சங்க உறுப்பினரும் மட்டுவில் மத்தி
கிராம அலுவலருமான
**க. வாமதேவன்**
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி கந்தையா பசுபதி

அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபங்களைக் கண்ணீர்க் காணிக்கையாக்குவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரதேச செயலக ஊழியர்**
**நலன்புரிச்சங்க உறுப்பினர்கள்.**

பிரதேசசெயலகம்,
தென்மராட்சி,
சாவகச்சேரி, (சி/4364)

## 31 ஆம் நாள் நினைவு தினம்



கடந்த 26. 06. 1998 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த

அமரர்
**விநாசித்தம்பி சுந்தரம்**

அவர்களின் அந்தியேட்டி சபிண்டீகரணக் கிரியைகளும், பிரார்த்தனையும் 26. 07. 1998 காலை 10 மணிக்கு அமரரின் இல்லத்தில் நடைபெறும். இவ் வைபவத்தில் பங்குகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

கைதடி நுணாவில்,
சாவகச்சேரி. (57805)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| உதயம் | அஸ்தமனம் |
|---|---|
| 04 — 07 — 1938 | 05 — 08 — 1997 |

**அமரர் பொன்னம்பலம் இராமச்சந்திரன்**
(இளைப்பாறிய தபாலதிபர்)

திதி: **26 — 07 — 1998**

ஓராண்டு ஓடிவிட்டது—ராம
சந்திர ஒளி ஒளிந்துவிட்டது—எம் தந்தையே!
வாழ்க்கை என்ற பயணத்தில்
வழி நடத்த யாருமின்றிக்
கலங்கி நிற்கும் அன்னையுடன்—எமை
எழுந்து நிற்கும் உரமுடன்
நிழலாகிப் போனது நிஜமானாலும்
நிழலாக இருந்தெமைக் காப்பீர்கள்— எனவெண்ணி
இறை நிழலில் உறையும் எம்பதியின்
ஆத்மா சாந்தியடைய இறைஞ்சுகிறோம்—
இறைவனை!

—குடும்பத்தினர்

இடைக்காடு,
அச்சுவேலி. (57791)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜுலை 26
கொக்குவில் மக்கள் நலன் புரிச் சங்கத்தின் சார்பில் நல்லூர் உற்சவத்தில் பணி புரியவிருக்கும் தொண்டர்களுக்கான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.
(உ-3)

## மரம் விழுந்து வான் சாரதி உயிரிழப்பு

கொழும்பு, ஜுலை 26
கொழும்பில் கடந்த வியாழனன்றுஇரவு வீசிய கடும் காற்றால் வீதியில் நின்ற மரம் ஒன்று வீதியால் சென்ற வான் ஒன்றின் மீது வீழ்ந்ததில் அதன் சாரதி கொல்லப்பட்டார்.

கொழும்பு நகரசபை மண்டபத்துக்குச் சமீபமாக ஆனந்தக்குமாரசாமி வீதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.
(உ-8)

## பதவியேற்பு

சண்டிலிப்பாய், ஜுலை 26
மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தின் புதிய நிர்வாக சபை பதவி ஏற்பு வைபவமும், வருடாந்த மலர் வெளியீட்டு விழாவும் இன்று ஞாயிற்றுக் கிழமையன்று காலை 10 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் கழகத்தலைவர் லயன் ஏ.சி. செபநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது. இவ் வைபவத்தில் பிரதம அதிதியாக பிராந்திய தலைவர் லயன் டாக்டர் எஸ்.எஸ். அருளானந்தம் கலந்து கொள்வார். கௌரவ விருந்தினராக லயன் ஏ. தங்கேஸ்வரனும், லயன் டாக்டர் வி. தியாகராஜாவும் கலந்து கொள்வார்கள். பல சமூக நலத்திட்டங்களும் இவ் வைபவத்தில் இடம் பெறவுள்ளன.
(ஐ-135)


**யூனிவேர்சல்**
கந்தர்மடம்
**99 A/L**
வினாவிடை
இந்துநாகரிகம்
இந்துசமயம்
ஆரம்பம்: 27-07-98
திங்கள் காலை 6.30
(57855)


**யாழ்ப்பாணப்**
**பல்கலைக்கழகம்**
**மகாபொல**
**கொடுப்பனவு**
**1995/96**

சகல பீடங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான மகாபொல கொடுப்பனவுகள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலுள்ள மக்கள் வங்கிக்கிளையில் வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. கொடுப்பனவிற்கான கால அட்டவணை பல்கலைக் கழக அறிவித்தற் பலகைகளில் இடப்பட்டுள்ளன.

(சி/4377)


**பழுதடைந்த தொலைக்காட்சிகள் (T.V)**
**றேடியோ மணிக்கூடுகள்**

பழுதடைந்த தொலைக்காட்சிப்பெட்டிகள் (TV), றேடியோ, மணிக்கூடு உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். பழுது பார்க்கப்படும். தெளிவாக T.V பார்க்க பழைய புதிய அன்ரனாக்கள் பொருத்தப்படும். ஓரிரு நாள்களில் கலர்ப்படச் சுருள்கள் கழுவிக் கொடுக்கப்படும். (கொழும்புத் தராதரத்தை விட விசேடமாக)

**வீனஸ் டெல்கா**

கிளை:
284, ஸ்ரான்லி வீதி,
பஸ் நிலையம் (நாக விகாரை முன்)
(மீன் சந்தை அருகில்), யாழ்ப்பாணம்.
சாவகச்சேரி T.P. NO: 2064
(சி/ 4369)


விராட் விஸ்வப்பிரம்மனே நம

## வாழ்த்துகின்றோம்

அகில இலங்கை விஸ்வகர்ம குல சங்கத்தின்
கௌரவ தலைவரும்,
திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பாலய அதிபரும்,
இலங்கையில் மட்டுமன்றி, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் சிற்பக்கலைக்கு பெருமையூட்டியவரும் சுமார் 125-க்கு மேற்பட்ட சித்திரத்தேர்களை உருவாக்கியவரும்,
சிற்பக்கலாநிதி, சிற்பக்கலாமணி, சிற்பரதவித்தகன், சிற்பச்சக்கரவர்த்தி, சிற்பராஜசிம்மன், சிற்பசிகாமணி, தேர்ச்சுரபி எனப்பல்வேறு கௌரவப்பட்டங்களையும் பெற்று பல தேவஸ்தானங்களால் பாராட்டப் பெற்றவரும், சமூக, சமயத் தொண்டுகளால் பொது மக்களின் நன்மதிப்பைப் பெற்றவருமான ஸ்தபதி
**ஆறுமுகம் ஜீவரட்ணம் அவர்களும்**
மிருதங்க கலாவித்தகனும் மிருதங்க ஆசிரியருமான
சங்கீத ரத்தினம்
மயிலிட்டி பண்டாரம் சின்னராசா அவர்களும்
வில்லிசை வேந்தன், கலாவினோதன்
அச்சுவேலி க. கணபதிப்பிள்ளை (சின்னமணி)
அவர்களும்

இலங்கை அரசினால் ''கலாபூஷணம்'' விருது வழங்கப் பெற்றுக் கௌரவிக்கப்பட்டமையையிட்டு மகிழ்ச்சியடைவதோடு அவர்கள் மேலும் நீண்டகாலம் வாழ்ந்து கலை உலகுக்கு தொண்டாற்ற நல்லருளை வழங்க வேண்டுமென இறையருளை வேண்டி வாழ்த்துகின்றோம்.

த. பரராஜசிங்கம் ஜே. பி.
செயலாளர்
அகில இலங்கை விஸ்வகர்ம குல சங்கம்,
காமாட்சியம்பாள் இந்து பரிபாலன சபை,
நீர்வேலி. (சி-4370)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 06 — 11 — 1930 | 26 — 06 — 1998 |

**திருமதி சிவக்கொழுந்து பூபாலகிருஷ்ணன்**

அந்தியேட்டி நாள் 26-07-98

அரவணைத்து எமக்கென்றும் அன்பதனைப்
பொழிந்த அம்மா!
அகன்றீர்கள் இன்றோடு ஒரு மாதம் ஆகுதம்மா!
கரந்திட்ட தினமுதலாய்க் கலங்கியிங்கு
மலங்குகின்றோமே
கனவினிலே வந்தேனும் கனிவுமுகம் காட்டுமம்மா!

அமரரின் ஆத்ம சாந்திக்கான அந்தியேட்டி சபிண்டீகரணக் கிரியைகளில் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், அன்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
பெறாமக்கள்.

சீனட்டி,
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை. (57617)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## 15 வருடங்களின் பின்னரும்....

இந்த நாட்டின் சரித்திரத்தில் பெரும் கறையை உண்டாக்கிய கறுப்பு ஜூலைக் காலம் இதுவாகும். தமிழர்கள் மீதான ஒடுக்கு முறையும், இன அழிப்பும் தீவிரமடைந்து சரியாகப் பதினைந்து வருடங்கள் ஆகின்றன.

1983 ஜூலை இனக்கலவரத்தின் பின்னரே தமிழர்களுக்கு எதிரான அடக்கு முறையும், பகைமை உணர்வும் முன்னர் இல்லாத அளவுக்கு மிக மோசமான முறையில் தென்னிலங்கையில் மேலோங்கத்தொடங்கின.

அது போலவே, தமிழர்களின்உரிமைப் போராட்டமும் கறுப்பு ஜூலை காலத்திலிருந்தே உத்வேகம் அடைந்தது. சாத்வீகப் போராட்டம் தங்களது உரிமைகளைப் பெற்றுத் தராது என்ற நிலையில், தமிழர்கள் ஆயுதப் போராட்டத்தை தீவிரமடையத் தொடக்கியதும் இக் காலத்திலேயே.

அதன் பின்னர் கடந்த பதினைந்து வருடங்களில் தமிழர் பிரதேசங்களில் பல மாற்றங்கள் நிகழ்ந்து விட்டன. சண்டை, சமாதானம், தீர்வு முயற்சி, பல வகைப் பேச்சுகள், சமரசம், ஒப்பந்தம் பின்னர் மோதல், தொடர்ந்து போர் என்று பல மாற்றங்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. தமிழ்ப் பிரதேசங்களில்பெரும் உயிர், உடைமை அழிவுகள் மேற்கொள்ளப்பட்டு விட்டன; அவை இப்போதும் தொடர்கின்றன. இந்த அழிவுகளிலும், போர் தரும் அவலங்களிலும் இருந்து எப்பொது மீட்சி கிடைக்கும் என்ற ஏக்கத்துடனும் விரக்தியுடனும் தமிழரின் வாழ்க்கை இருளடைந்து தொடர்கிறது.

ஆட்சியில் உள்ள அரசு பதவிக்கு வந்த போது திருப்பம் ஒன்று, தீர்வு ஒன்று கிடைக்கும் என்றிருந்த நம்பிக்கையையும் தமிழ் மக்கள் இப்போது இழந்துவிட்டனர்.

அரசியல் தீர்வு ஒன்றின் மூலம் தமிழர்களுக்கு நியாயமான உரிமைகளை வழங்குவதாக வாக்குறுதி அளித்த பொ. ம. ஐ. மு. அரசு, போரில் தான் வெற்றி பெறும் வரை அத்தகைய தீர்வு எதனையும் கொண்டு வரப்போவதில்லை என்று சமிக்ஞை காட்டி நிற்கிறது.

தமது பிரதேசத்தில் தன்னாட்சி உரிமையுடன், தம்மைத் தாமே ஆண்டு நிர்வகித்து, சுயகௌரவத்துடன் சமத்துவமான பிரஜைகளாக சமநீதி பெற்று வாழ்ந்து தமது பிறப்புரிமைகளை குறைவின்றி அனுபவிக்க வகை செய்ய வேண்டும் என்பதே தமிழர்களின் கோரிக்கை.

இதனைப் புரிந்துணர்வுடன் ஏற்றுக்கொண்டு, ஒற்றுமையுடன் வாழ்வதற்கான தீர்வு ஒன்றை நட்புறவான வழியில் உருவாக்கி சமாதானத்தையும் அமைதியையும் கொண்டு வருவது குறித்து இப்போதாவது தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் சிந்திக்கக் கூடாதா?

இரு தரப்புகளிலும் மக்கள் அழிந்து, நாடுசீரழிந்து இரு இனங்களும் துருவப்பட்டு பகைவர்களாக வாழ்வதால் யாருக்கு என்ன பயன்? இவ்வாறு இதய சுத்தியுடன் மனிதமாண்புடன் சிந்தித்தால் இருள் அகன்று ஒளி பிறக்க ஏதுவாகும்.

# தமிழர்கள் முழு உரிமையுடன் வாழும்

# சூழலை ஏற்படுத்தப் பாடுபடுபவர்

## சிவசிதம்பரத்தின் பவள விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஜூலை26 தமிழ் மக்களைப் பொறுத்த வரை அனைத்து மதத்தினரும் அவரவரின்முழு உரிமைகளோடும், பாதுகாப்போடும் வாழக்கூடிய ஒரு சூழ்நிலையைஉருவாக்குவதில் விடுதலைக் கூட்டணித் தலைவர் மு, சிவசிதம்பரம் போன்றோர் அயராது உழைத்து வருகிறார்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் இடம் பெற்ற தலைவர் மு. சிவசிதம்பரத்தின் பவளவிழா கூட்டத்தில் உரையாற்றிய முஸ்லிம் பிரதிநிதி சாகுல் ஹமீத் இவ்வாறு கூறினார்.

சிவ ஸ்ரீ சிவ கடாட்சக் குருக்கள தலைமையில் எளிமையாக இடம் பெற்ற இந்த பவளவிழா நிகழ்வில் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

மதத்தலைவர்களின்பிரார்த்தனைகளுடன் பவளவிழா ஆரம்பமானது.

சாகுல் ஹமீத் தமது உரையில் மேலும் கூறியதாவது:

தலைவர் சிவசிதம்பரம் நேர்மையான ஓர் அரசியல் வாதி. ஒப்பற்ற தலைவர்; தமிழின விடுதலைக்காகத் நமது வாழ்வை அர்ப்பணித்து வருபவர் என்று தெரிவித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி யாழ். மாவட்ட செயலாளர் பொன். மதிமுகராசா உரையாற்றும் போது கூறியதாவது: —

தலைவர் சிவசிதம்பரம் சிறந்த கல்விமான் மட்டுமல்ல; ஓர் ஒப்புயர்வற்ற தலைவருமாவார். அமிர்தலிங்கம் அவர்கள் இவரின் தலைமையைமதித்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராக இவரைப் பிரேரித்து இவரின் வழிநடத்தலில் கட்சி வளர்ந்ததைக் கண்டு ஆனந்தமடைந்தார்.

தமிழ் மக்களின் சுபீட்சத்துக்காக தான் கொண்ட கொள்கையிலிருந்து இம்மியளவும் பிசகாது நேர்மையாக கட்சியை வழி நடத்தி வருகிறார்.

மகாத்மா காந்தி, தந்தை செல்வா ஆகியோரின் அஹிம்சை வழியைப் பின்பற்றி தமிழின விடுதலைக்காக தன்னையே அவர் முழுமையாக அர்ப்பணித்து விட்டார். அவர் இன்னும் நீடூழி காலம் வாழ்ந்து தமிழ் மக்களுக்குச்சேவையாற்ற வேண்டும—என்று தெரிவித்தார்.

அ.பொ. செல்லையா, செ. பத்மநாதன், ஹென்றி ஆசீர்வாதம் உட்பட பலர் இந் நிகழ்வில் உரையாற்றினார்கள். (ஐ-5-ரீ)

## மிருசுவில் பொதுச்சந்தை; இயங்க வைக்க முயற்சி

தென்மராட்சி ஜூலை 26 கடந்த இரண்டு வருடங்களாக இயங்காமல் உள்ள மிருசுவில் பொதுச்சந்தையை மீண்டும் இயங்க வைக்க சாவகச்சேரி பிரதேச சபையினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

முதற் கட்டமாக சந்தையின் வேலிகள் அடைக்கப்பட்டுள்ளன. விரைவில் இந்தச் சந்தையில் மரக்கறி, மீன், இறைச்சி ஆகிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

முன்னர் கிளாலி, விடத்தற்பளை, உசன், கெற்பலி, கரம்பகம், எழுதுமட்டுவாள் வடக்கு, மிருசுவில் வடக்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளின் உற்பத்திப் பொருள்கள் இந்தச் சந்தையில் விற்பனை செய்யப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-117)

## பருத்தித்துறைப் பகுதியில் நாய்களுக்குத் தடுப்பூசி

வடமராட்சி, ஜூலை 26 பருத்தித்துறை, புலோலி, துன்னாலை ஆகிய பகுதிகளில் வளர்ப்பு நாய்களுக்கு அடுத்த மாதம் 3 ஆம் திகதி தொடக்கம் 24 ஆம் திகதி வரை விசர் நோய்த் தடுப்பூசி போடப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் செய்துள்ளது.

பருத்தித்துறை சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் அடுத்த மாதம் 3 ஆம் திகதி தும்பளை கிழக்கு சனசமூக நிலையம், பெரியதம்பிரான் பிள்ளையார் கோவிலடி ஆகிய இடங்களிலும் —

4 ஆம் திகதி பருத்தித்துறை நகரசபை, மத்திய மருந்தகம் ஆகியவற்றிலும்—

5 ஆம் திகதி மேலைப் புலோலி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையத்திலும் —

10 ஆம் திகதி மாதனை காளிகோவிலடி, தட்டா தெருபாடசாலை என்பனவற்றிலும் —

தடுப்பூசி ஏற்றப்படும்.

புலோலி பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் அடுத்த மாதம் 11 ஆம் திகதி புலோலி கால் நடை வைத்திய அதிகாரி அலுவலகத் திலும் —

12 ஆம் திகதி கற்கோவளம் சனசமூக நிலையம், வராத்துப்பளை சனசமூக நிலையம் ஆகியவற்றிலும் —

14 ஆம் திகதி தென் புலோலி உபய கதிர்காமம் சனசமூக நிலையம், முருகையன் கோவிலடி சனசமூக நிலையம் ஆகியவற்றிலும் —

தடுப்பூசி ஏற்றப்படும்.

துன்னாலை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் அடுத்த மாதம் 17 ஆம் திகதி அல்லையம் பதி சனசமூக நிலையம், வல்லியானந்தம் சனசமூக நிலையம் என்பனவற்றிலும், —

21 ஆம் திகதி கோவிற்கடவை சனசமூக நிலையம், கலிகை சனசமூக நிலையம் ஆகியவற்றிலும் —

24 ஆம் திகதி யார்க்கரு சனசமூக நிலையம், கரவெட்டி சன சமூக நிலையம் ஆகியவற்றிலும் தடுப்பூசி போடப்படும். (ஐ-173)

# இறை சித்தத்தை நிறைவேற்றுவதே உண்மையான உலக வாழ்வாகும்

### அருள்திரு. சாள்ஸ் கொலின்ஸ்

''யேசு வளர வளர ஞானத்திலும் முதிர்ந்து, கடவுளுக்கும், மனிதருக்கும் மேன்மேலும் உகந்தவரானார்.''

வாழ்க்கைப் பயணத்தில் கடவுளுக்கும், மனிதருக்கும் உகந்தவர்களாக வாழ்வதே வாழ்வின் சிறப்பும், பயணத்தின் நிறைவும் ஆகும். எதிர்காலத்தில்—வருங்காலத்தில்—வழி பிறக்கும் என்று சொல்லிச் சொல்லி ஏமாந்து போனோமோ தெரியாது என்று எம்மில் பலருக்கு நினைக்கத் தோன்றுகின்றது.

பயணங்கள் முடிவதில்லை. எமது நினைவலைகளை மீண்டும் திரும்பிப் பார்க்கும் போதெல்லாம் நாம் சுமந்த கஷ்டங்கள், கவலைகள், பயங்கரமான சூழ்நிலைகள் வாழ்வின் ஆயுளை பாதியாக்குகின்றன. இவை வாழ்வின் முடிவல்ல; எம் வாழ்க்கைப் பயணங்களில் நாம் சந்திக்கும் சவால்கள்.

சூசையும் மரியாளும் தங்கள் வாழ்க்கைப் பயணத்தில் சந்தித்த சவால்களினூடாக பயணத்தில் இறைவன் பக்கத்திலிருந்து பயணம் செய்கின்றார் என்னும் ஆழமான உண்மையை தங்கள் குடும்ப வாழ்வினூடாக எமக்குத் தெளிவு படுத்துகின்றார்கள்.

இல்லறம் என்னும் சோலைக்குள் தென்றலும் வரலாம்; புயலும் வரலாம்; அதனோடு வாழ்வு முடிவடைகின்றது. அர்த்தம் இல்லாமல் போகின்றது என்று முடிவு கட்டினால் வாழ்வு வாழ்வாகாது.

உலகம் என்னும் கடலில் மிதந்து கொண்டிருப்பதே எமது குடும்பம் எனும் ஓடம். இறைவனின் சித்தத்தை நிறைவேற்றுவதை இலக்காகக் கொண்டு, இறை விசுவாசத்தை சக்தியாக, பலமாகக் கொண்டு வாழ்வதே உண்மையான வாழ்வாகும்.

கடந்த காலத்தில் பல திட்டங்கள் சமைத்து, அவற்றை நிறைவேற்றியதால் மகிழ்ச்சியும், குறைகளினால் கவலையும், பல சந்தர்ப்பங்களில் மனச்சோர்வும் அடைந்து பெருமூச்சுக்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் அனைவருக்கும் கிறிஸ்து பிறந்த மகிழ்ச்சியான செய்தியும், வரப் போகும் காலம் மனதிற்கு இதமான நிகழ்வுகளைக் கொண்டுவரும் என்ற உள்ளார்ந்த இன்பமும் தருகின்றது. தொடர்கின்ற பயணத்தில் எமது குடும்பத்திற்கு நிறைந்த ஆசிகளுடன், பிள்ளைகள் வாழ்க்கை வழியை அறிந்து கொள்ளவும், தொழில் துறைகள் வளரவும், வழிபிறக்கும் என்ற நம்பிக்கையுடன், இறைவனைத் தேடிச்செல்ல வேண்டும்.

எதிர்காலம் எப்படி இருக்கும் என்று கனவு காண முடியாதவர்கள் நாங்கள். ஆனால் ஆண்டவனின் துணையுடன் ஒளி மயமான புதிய காலம் மலரும் என்னும் நம்பிக்கையுடன், குடும்பமாகச் செபிப்போம். தொடரும் பயணத்தில் இறைவன் தொடர்ந்து வருவார். ★

**ஞாயிறு நற்பிரசாதம்**

## சமய நிகழ்வில்

நீர்வேலி வாய்க்கால் தரவைப் பிள்ளையார் கோயில் வருடாந்த மஹோற்சவம் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து12 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 6 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு இரதோற்சவமும், மறுநாள் காலை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (ஐ-8-110)

★ ★ ★

நீர்வேலி அருள்மிகு செல்லக்கதிர்காம சுவாமி கோயிலில்கதிர்காமமஹோற்சவ தினங்களை முன்னிட்டு விசேட அபிடேக ஆராதனைகளும், பூசைகளும் நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை காலை தீர்த்தோற்சவத்துடன் விசேட பூசைகள் நிறைவுறும் என ஆலயக் குருக்கள் சிவஸ்ரீ தியாகராஜா தெரிவித்துள்ளார். (ஐ-110)

★ ★ ★

நயினை ஸ்ரீநாக பூஷணி அம்மன் கோயிலில் ஆடிப் பூரத் திருவிழா நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. அன்றைய தினம் விசேட திரவிய அபிஷேகமும், நவோத்தர சகஸ்ர மஹா சங்காபிஷேகம் (1008 சங்குகள்), விசேட பூசை, ருது சாந்தி, தீபாராதனை, திருவூஞ்சல், தேவஸ்தோத்திர திருமுறைப் பாராயணம்,புஷ்பாஞ்சலி ஆகியனவும் இடம் பெற்று தொடர்ந்து அம்பிகை தாமரைப்பூ வாகனத்தில் வீதியுலா வருவார். (ஐ-30)

★ ★ ★

ஈச்சமோட்டை கலட்டிப் புலம் ஞானவைரவர் ஆலயத்தில் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அபிஷேகத்துடன் ஆடிப்பூரத் திருவிழா ஆரம்பமாகும். நண்பகல் 12.30 மணிக்கு மகேஸ்வர் பூசையும், பிற்பகல் 4.30 மணிகு சுவாமி வீதியுலாவும் இடம்பெறும். (ஐ-17-30)

★ ★ ★

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தில் நாளை திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு அபிஷேகத்துடன் ஆடிப்பூரத்திரு விழா நடைபெறும் சுவாமி வீதியுலாவும் இடம்பெறும். (ஐ-17-30)

## புனரமைப்பு

ஈச்சமோட்டை விதானையார் வீதியில் உள்ள கால்வாய்கள் புனரமைக்கப் பட்டு வருகின்றன.

கடந்த பல வருடங்களாகத் தூர்ந்து போயிருந்த கால்வாய்களும் மதகு ஒன்றும் தற்போது திருத்தப் பட்டு வருகின்றன. (ஐ-17)

### உதய வாக்கு

வாழ்க்கையின் சுக துக்கங்களை ஒரேமாதிரி நோக்குபவன் எவனோ அவன் தான் சிறந்த கல்விமான்.

— பரமஹம்சர்

## நாளை

ஆடி -11

திங்கட்கிழமை

திதி: சதுர்த்தி

முன்னிரவு: 10.17வரை.

நட்சத்திரம்: பூரம்

மாலை: 7.03 வரை.

நாக சதுர்த்தி விரதம்

சுபநேரம்: 12.02 - 1.31

ராகுகாலம்: 7.32 - 9.02

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கும் சுய விலாசம் தேவை

அன்புள்ள அம்மா!

உனது வரிகளில் சில சிந்தனையைத் தூண்டின; பல நெஞ்சில் முள் எனக்குத்தின. ''பொறுப்பற்ற தீர்வுகளுக்காக உன் உணர்ச்சிகளை வீணாக்காதே'' என்ற அறிஞரின் அமுதவாக்கு கொதித்து எழுந்த உணர்ச்சிகளை நெறிப்படுத்தின. நீங்கள் என்னை சரியாகப் புரியவும் உங்கள் உள்ளமும், உடலும் பாதிப்புறாதிருக்கவும் இக்கடிதத்தினை எழுதுகிறேன்.

அநேக வேளைகளில் அறிவு பூர்வமாக சிந்திக்காது உணர்ச்சி அலையினுள் சிக்குண்டு சிரழியும் கட்டிளம் பருவத்திலேயே எல்லாக் கருத்துக்களுக்கும் கோயில் மாடு போலத் தலையாட்டாத எனக்கு ''திரியாதே, செய்யாதே'' என ஏன் எழுதினீர்கள். பயமா? பதற்றமா? அம்மா எனக்கு என்னுடைய எல்லை தெரியும்.

சிகையலங்கரித்தலிலும் சிங்காரித்தலிலும், மிகப்பெரிதாக வேறுபடாத நாம்கல்வி, வேலை, வேலைதேடல், திருமணம் என்பவற்றில் முட்டிமோதுகிறோம். கூந்தலை சீவிச் சிங்காரித்து மணக்கும் மலர்களை சூழ தோற்றத்தைப் பேணுதல் அவசிய தேவை. அழிகின்ற அழகிற்கு ஆக்கம் தேடி நேரத்தை வீணடித்தும் பணத்தினைச் செலவு செய்தும் ஒப்பனை செய்ய அவசியமே இல்லை. காரிலும், ஸ்கூட்டரிலும் ''ஜம்'' என்று ஏறி இறங்கும் நீங்கள் என்னை சாறியுடன் 25 மைல்கள் சைக்கிள் ஓடச் சொல்லுகிறீர்கள். மன்னிக்கவும் முடியாது. பஞ்சாபியை உடுக்கிறமாதிரி உடுத்து சால்வையைப் போட்டு பின் பண்ணி ஓடினால் அது கவர்ச்சி காட்டுவதாக இருக்காது.

அம்மா பட்டமளிப்பு அன்று அழகானவர்கள் கூட சொக்கக்கும், சொண்டிற்கும் சிவப்புக் கலரும் பூசியபின் நீண்ட நேரம் காந்திருந்த பொழுது, பூசியவை கலைத்தும் கரைந்தும் போக கரடியாகிறார்கள், பாவங்கள் எனக்கு பட்டமளிப்பு என்வாழ்நாளில் என் உழைப்பால் கவனத்தால் பெற்ற வெற்றியின் திருநாள். எனது விருப்பத்திற்கு என்னைத் திருப்திப்படுத்த சாறி வாங்க எண்ணினேன் இயலவில்லை.

> 'சூரியகாந்தி'யில் இடம்பெற்று வரும் அம்மாவுக்கும் மகளுக்கும் இடையிலான மடல் மோதலில் மகள்மாரின் கடிதங்களே அதிகம் குவிந்திருக்கின்றன, அந்த வகையில் புதிய, சர்ச்சைக்குரிய கருத்துக்களை முன் வைக்கும் ஒரு மகளின் கடிதத்தை இம்முறை வெளியிடுகிறோம். அடுத்த வாரம் அம்மாவின் கடிதம் பிரசுரமாகும்.
>
> இங்கு பிரசுரமாகும் மடலை வரைந்தவர்
>
> ''கவிகவே''

யாழ்ப்பாணம் கச்சேரியில் வேலை வாய்ப்புப் பதிவகத்தில் எனது தோழிகளுடன் சேர்ந்து நானும் பதிவு செய்துவிட்டு எரிச்சலையும், ஏமாற்றத்தையுமே குழந்தையாகப் பெற்றுள்ளேன். தனியே பட்டத்துடன் வேலை பெற இயலாது என்பதனை உணர்ந்த பின்புதானே கொம்பியூட்டர், சுருக்கெழுத்து, தட்டெழுத்து, ஆங்கிலம் என்று படிக்கத் தொடங்கினேன். நீங்கள் பட்டதாரிகளுக்கு வேலை வழங்கப்படும் என்ற ஜனாதிபதியின் அறிக்கையை எவ்வளவு காலம் வாசிக்கிறீர்கள். கொம்பியூட்டர் இன்று கட்டாயம் அம்மா. ஆங்கிலம் இணைப்புமொழி. இவற்றை ஊரிலே படிக்க இயலாது.

படித்தது தமிழ் மொழி மூலம். உயர்தரத்திலிருந்து ஆங்கிலத்தின் அவசியத்தை அறிந்திருந்தேன்: எனினும் அதனை ஊன்றிப் படிப்பதற்கான சந்தர்ப்பம் இதுவரை கிடைக்கவில்லை. உயர்தரப் பரீட்சை 4. பாடங்களில் செலுத்திய நேரத்தினை இதிலும் பகிர்ந்து செலுத்தி இருந்தால் அனுமதி சந்தேகமாக இருந்திருக்கக்கூடும். பல்கலைக் கழகத்திலும் ஆங்கிலம் படிக்க நேரம் செலவிட்டிருந்தால் ''கிளாஸ்'' கிடைத்திருக்காது. ''கிளாஸ்'' அடித்தே இந்த நிலை.

நீங்கள் செய்யப்போவது மாப்பிள்ளை 'Find-ing' இல்லை அம்மா, அது Hunting அதுமுழுக்க முழுக்க உங்களுடைய பொறுப்பு. நீங்கள் 4 வருடங்கள் பொறுக்கலாம். 'பெண்ணின் திருமணத்திற்கு அதிசிறந்த வயது 26'' என்று நான் சொல்லவில்லை உளவியல்நூலில்படித்திருக்கிறேன். அதுவரை பொறுத்திருங்கள் 'நடுத்தர வருமானத்தினைப் பெறும் குடும்பத்தினர் தமது திருமண வாழ்வின் இரண்டாவது காலகட்டத்தில் (சுமார் 10—12 வருடங்களுக்குள்) அநேகமாக பொருளாதாரப் பிரச்சினைக்குள்ளாகின்றனர்.

''அம்மா, நினைவிருக்கா'' பிள்ளை உனக்கு ஏன் வேலை? எங்கட சொத்து இரண்டு தலைமுறை சும்மா இருந்து சாப்பிடப்போதும் என்று தானே உடுத்த உடுப்போடு ஓடினோம்.

இடப்பெயர்வின் பொழுது மாமாவின் அகாலமரணத்தின் பின் மாமி, மச்சாள்மாரையும் மச்சானையும்ஆசிரியராக இருந்ததால் சமாளித்துவிட்டார்.

அதே நேரம் சித்தி தம்பியையும் தங்கைச்சியையும் படிப்பிக்க நிரந்தரவருமானம் இல்லாததினாலேயே காணி 20 பரப்பையும் வீட்டில் அரைவாசியையும் நாங்கள் கேட்ட விலைக்கே விற்றனர். உங்களுக்கு சார்ந்து வாழ்வது சுகம், எனக்குச் சுமை. சார்ந்திருக்கும் ஏணி சறுக்கிவிட்டால் அல்லது சாய்ந்துவிட்டால் — எழுந்து நிற்க ஏணி தேவை—அது மன உறுதியும் பொருளாதார வசதியுமே. தயவு செய்து எனக்குரிய அத்தியாவசிய தேவைக்கான பணத்தினையாவது சம்பாதிக்கும் வரை நீங்கள் பொறுத்திருந்தால் என்ன? 7,500 ரூபாவுக்குச் சாறி வாங்குவதற்கு நீங்களே இந்தத் துள்ளு துள்ளுகிறீர்கள்? அம்மா இந்தக் காலத்திலே இரண்டு பேரும் உழைத்தால் தான் குடும்பம் நடத்தலாம்.

## மடல் மோதல்

தொடர்ந்து என்ன படிப்பது- எவரிடம் எங்கு படிப்பது என்பதை ஆராய்ந்து அறிய உங்களை விட அப்பாவே நல்லவர். அப்பாவை விட விரிவுரையாளர்களும் பேராசிரியர்களும் இன்னும் திறம்; ''துறை சார்ந்தவர்களினதும் தெளிந்தோரினதும் வழிகாட்டலிலேயே செயற்பட வேண்டும்- கல்வி- வேலையில்'' என புத்திஜீவிகள் சொல்லியுள்ளனர்.

எமது சிந்தனையாளர் தொல்காப்பியர் முதல் இன்றைய அயல் நாட்டு அறிஞர்கள் வரை எல்லோரும் குடிப்பிறப்பு, வயது, பருவம், வடிவம், அன்பு, அருள், மனவுறுதி, தோற்றப்பொலிவு என்பன திருமணத்தினை நிர்ணயிப்பதில் கருத்தில் கொள்ளல் அவசியம் என்கின்றனர். தோற்றப் பொலிவு, அழகு, பருவம் என்பதில் மதிப்பெண் இடுவதில் மகாராணி நானே- மற்றவற்றில் என்னை விட அறிவும், அனுபவமும் பெற்ற நீங்களும் அப்பாவுமே பெரியவர்கள்,

அம்மா,

உங்களைத் திருப்திப்படுத்துவதற்காக, என்னில் அழகைத் தேடாது, அன்பைத் தேடாது, பெண்மையின் மென்மையைத் தேடாது 24 கரட் தங்கத்தைத் தேடும் 'வரனிற்கு தலையை நீட்டி' ஒத்துப்போக இயலாதுள்ளது. அவ்வாறே மனம் ஒன்றியும் ஒருங்கிணைய இயலாதுள்ளது. ஒத்துப் போவதினாலும், ஒருங்கிணைவதாலும் (வேண்டா வெறுப்பாக) என்மனம் பிறழ்ந்து என நடத்தையில் விபரீதங்கள் விளைவதை விட, பெண்மையின் தலையாய - சிறப்பான தாய்மையை— தாய்க்குரிய கடமைகளைத் தவிர்த்து மீட்கப்படாத வீணையாகவே வாழ்வேன்.

''பூவாகப் பிறந்தாலும்
பொன் விரல்கள் தீண்டலையே;
பொன் விரல்கள் தீண்டலையே;
பூமாலையாகலையே'' என்று சோக
கீதம் பாடமாட்டேன்.

அம்மா! மகள், மனைவி, தாய் இவைகளைத்தவிர —எனக்கு என்று ஒரு சுய விலாசம் தேவை என்று நினைக்கிறேன் இதில் என்னை நிலைப்படுத்திக் கொள்ள. நான் முனைகின்றபொழுது பழைமையினுள் மூழ்கி விட்ட நீங்கள் பயப்படுகிறீர்கள்.

கலந்துபேசி எவரெவர் எந்த இடங்களில் விட்டுக்கொடுக்க இயலுமோ அவ்விடங்களில் விட்டுக்கொடுத்து இணக்கம் காண்போம்— இல்லையா? அதுவரை தயவு செய்து பொறுத்திருப்பீர்களாக.

அன்பு மகள்
கவிதா

## தமிழர்களின்...

(மூன்றாம் பக்கத் தொடர்)

வன்மார், கண்ணை மூடிக் கொண்டு கற்பனை உலகில் வாழ்கிறார்கள். இன்னும் சிலகாலம் இப்படியே போனால் வண்ணத்தமிழும் வாழும் தமிழரும் சின்னாபின்னமாவது திண்ணம்.

வேற்றுமைகள் மறக்கப்பட்டு, ஒற்றுமைக்குள் ஒன்றுபட்டு சமரசம் காணப்பட்டுச் சாந்தியும், அமைதியும், சமாதான சகவாழ்வும் தமிழர்களுக்குக் கிடைக்க ஆவன செய்ய வேண்டிய காலம் வந்து விட்டது.

இந்த வகையில் தமிழியற் சிந்தனை ஒன்றினை முன் வைக்க மனம் ஏவுகிறது. எங்கள் தமிழ் மொழியில் 247 எழுத்துக்கள் உண்டு. இதன் கூட்டெண் 13. எண் சோதிடத்தில் 13 மிகவும் பாதிப்புத் தரும் எண். இது அழிவிற்கும், காட்டிக் கொடுப்பிற்கும், அடாவடித்தனத்திற்கும், அகங்காரத்திற்கும், பூசல்களுக்கும், முரண்பாடுகளுக்கும், அமைதியின்மைக்குமுரிய எண். இந்த எண் ஒற்றுமையைச் சிதைத்து விடும். இந்த எண் வரும் திகதியில் ஆரம்பிக்கப்படும் காரியங்கள் தோல்வியிலேயே முடியும். கடந்தகால நிகழ்வுகள் இதற்குச் சான்றாகும்.

அன்று தொட்டு இன்று வரை தமிழரின் ஒற்றுமை இன்மைக்கு இதுவும் காரணமாகலாம்.

எனவே தமிழ் நெடுங்கணக்கில் ஆய்த எழுத்து மற்றும் ''ங'' எழுத்து, அல்லது ஐ. ஒள என்பவற்றை நீக்கியோ அன்றிப் புதுக்கியோ, கூட்டெண் மூன்றாக வரும்படி செய்தால் தமிழருக்கு இன்று வரை இருந்து வரும் ''தலையெழுத்து'' மாறி வாழ்வும் வளமும் பெருக வாய்ப்புண்டு எனக் கருதுகிறேன். தமிழ் தழுவிய சாயலார்க்கும், தமிழ் அறிஞர்களுக்கும், காணிக்கையாக இந்த சிந்தனை சமர்ப்பணமாகுக.

★

## புலமைப்பரிசில்...

(மூன்றாம் பக்கத் தொடர்)

களை விட மண வளர்ச்சி கூடிய ஒரு தலைமுறையாக நீங்கள் இருக்கிறீர்கள் என்பதில் கல்வியை நேசிக்கும் எம்போன்றவர்கள் மகிழ்ச்சியடைகிறார்கள்.

உங்கள் கல்வி வாழ்க்கையின் முதலாவது பிரதான திருப்பு முனையாகவே புலமைப்பரிசில் பரீட்சை இருக்கிறது. உங்கள் குழந்தைப் பருவத்தின் இறுதிக்கட்டமும் இதுவே. எனவே வெற்றிகரமாக இத்திருப்பத்தைக் கடந்து விட வேண்டுமென்பதில் உங்களுக்கும், உங்களைக் கற்பித்த ஆசிரியர்களுக்கும் பெற்றோருக்கும் அக்கறை இருப்பதில் வியப்பில்லை.

நீங்கள் பெறப்போகும் வெற்றியைப் பகிர்ந்து கொள்ள எத்தனைபேர் ஆவலுடன் காத்திருக்கிறார்கள் தெரியுமா? எமது பாடசாலையில் கற்றவரென்று பாடசாலை ஒரு புறமும், என்னிடம் படித்தவர் தானே என்று வகுப்பாசிரியரும், எங்கள் ரியூட்டரியில் படித்தவரென்று ரியூட்டரிக்காரரும், 'புலமைப் பரிசில் புகழ்' என்று பெயர் பெற்ற என்னிடம் படித்திருக்காவிட்டால் இப்படிசித்தி பெற்றிருக்கவே மாட்டார் என்று பெருமையாகக் கூறப் போகும் சில பிரபலங்களும் உங்களை நம்பியே காத்திருக்கிறார்கள். எப்போது பத்திரிகைகளில் போட்டுத் தங்களை மேலும் பிரபலப்படுத்திக் கொள்ளலாம் என ஆவலுடன் இருக்கிறார்கள்.

எனவே,

அன்பான குழந்தைகளே! உங்களையே நம்பியிருக்கும் இவர்கள் எல்லோரையும் ஏமாற்றிவிடாதீர்கள். ஏமாற்றிவிடமாட்டீர்கள் என நம்புகிறேன். ''தெய்வத்தாலாகாதெனினும் பயிற்சி மெய்வருந்தக் கூலி தரும்'' என்பது முதுமொழி. ''பயிற்சி திருவினையாக்கும் பயிற்சியுடையார் இகழ்ச்சியடையார்'' எனப் புதுமொழி உண்டல்லவா! அதனை நிச்சயம் நிரூபித்துக்காட்டுவீர்கள் என எண்ணுகிறேன்.

ஆகவே, இனி இதுவரை செய்தவைகளைமீட்பதில்மட்டுமே ஈடுபடுங்கள். பதற்றமடையாதுபாடங்களைப் படியுங்கள். போதிய ஓய்வும் எடுங்கள். மழை வெயிலில் இனி அலைந்து திரிந்து வருத்தத்தைத் தேடாதீர்கள். வீட்டிலிருந்து மட்டுமே படியுங்கள். பரீட்சையைச் சிறப்பாகச் செய்துவர ஆண்டவனைப் பிரார்த்திக்கமறவாதீர்கள். பரீட்சையில் நன்கு தெரிந்தவற்றையே முதலில் செய்யுங்கள். தெரியாதவற்றை நிதானமாகச் சிந்தித்து அதன்பின் விடை எழுதுங்கள். நீங்கள் அனைவரும் புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த சித்தி பெற்று எம் அனைவருக்கும் உளமகிழ்வை அளிப்பீர்கள் என வாழ்த்தி விடைபெறுகிறேன்.

உங்கள் திறன்கண்டு மனம் மகிழக் காத்திருக்கும்

அன்பு அண்ணா

★


## ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவ தின விழா - 1998

**புங்குடுதீவு 3 ஆம் வட்டாரம்**

வெகுதானிய வருடம் ஆடி மீ 13 ஆம் நாள் (29 - 07 - 98) புதன்கிழமை தொடக்கம் 24 ஆம் நாள் (09 - 08 - 98) ஞாயிற்றுக்கிழமை வரை விசேட அபிஷேக பூசைகள் ஆகியன நடைபெறும்.

அடியார்கள் அனைவரையும் மேற்படி விழாக்களுக்கு வேண்டிய அபிஷேகப் பொருள்களை உதவி அன்னையை வழிபட்டு அருள் பெற்றுச் செல்லுமாறு வேண்டுகின்றோம்.

ஆடிப்பூரம், நாகசதுர்த்தி, ஆடித் திங்கள் 11 ஆம் நாள் (27 - 07 - 98) திங்கட்கிழமை நடைபெறும்.

ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய
பரிபாலனசபை,
புங்குடுதீவு-3.

[57871]



## கண்ணீர் அஞ்சலி

மாபெரும் சக்தியாக் இம் மண்ணில் உலவி
அளப்பெருந் தொண்டாற்றிய அற்புத மனிதர்
கற்பக காவலர்

**கலாநிதி கனகராசா**

அவர்கள் விதிவழி ஏகி விட்டார்.
அவர் பிரிவால் துயருறுகின்றோம்;
ஆத்ம சாந்திக்காக இறைஞ்சுகின்றோம்.

அங்கத்துவ சங்கங்கள், கொத்தணிகள்,
சித்த வைத்திய கூட்டுறவுச் சங்க சார்பில்
வடமாகாண தெ. ப. பொ. கூ. சங்க
சமாசம்.

52, சோமசுந்தரம் லேன்,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

(சி/4386)



## கண்ணீர்ப் பூக்கள்

மறைந்த சிவநெறிப்புலவர்

**திரு. க. கனகராசா** அவர்களின்

மறைவு சைவத்தமிழ் உலகிற்குப் பேரிழப்பு.

அன்னாரின் மறைவால் துயருறும் உறவினர், நண்பர்கட்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சேக்கிழார் கழகம்,
யாழ்ப்பாணம்.

(57872)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் நலன்களுக்காக உழைத்த மாமனிதராக திகழ்ந்தவர் கனகராசா

## இறுதி யாத்திரைக்கு முன் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூலை 26

அமரர் கனகராசா சமய சமூகப் பணிகளில் மனம் ஒன்றிச் செயற்பட்டவர். அப்பணிகளை செய்து முடிப்பதில் மனநிறைவு கண்டவர். இந்த மண்ணில் வாழும் மக்களின் மேம்பாட்டுக்காகவும், எதிர்கால நன்மை கருதியும் அவர் ஆற்றிய பணிகள் சொல்லில் அடங்கா. பல்துறைப் பணிகளுக்கும் வாரி வழங்கி எங்கள் சமுதாயத்தின் மாமனிதராகத்திகழ்ந்த அவரின் இழப்பு ஈடுசெய்ய முடியாததாகும்.

இவ்வாறு துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி மறைந்த சிவதர்ம வள்ளல் கலாநிதி க. கனகராசாவுக்கு அஞ்சலி செலுத்தினார்.

அமரர் கனகராசாவின் இறுதிக் கிரியைகள் அவரது "திருவாலவாய்" இல்லத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நண்பகல் நடைபெற்றன.

குடாநாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும், எல்லாத் துறைகளைச் சேர்ந்தவர்களுமாக ஆயிரக் கணக்கானோர் அந்த மாமனிதருக்கு இறுதி அஞ்சலி செலுத்தினார்கள். பாடசாலைகள், அரச திணைக்களங்கள், சமய அமைப்புகள், சமூக நிறுவனங்கள், மகளிர் அமைப்புகள், தனியார் நிறுவனங்கள், வர்த்தக ஸ்தாபனங்கள் என்று பலதுறை சார்ந்தோரும் மறைந்த சமூகத் தலைவருக்கு நிரைநிரையாக வந்து அஞ்சலி செலுத்தினர்.

ஆசிரியர் ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெற்ற இரங்கலுரை நிகழ்வில் பேசுகையில் துர்க்கா துரந்தரி மேலும் தெரிவித்ததாவது:

யோகாசனத்தில் வல்லவரான அவர் தாம் நீண்டகாலம் வாழ்வேன் என்றே கூறிவந்தார். ஆனால் இயற்கை அவரை எம்மிடம் இருந்து பிரித்துவிட்டது. அவர் இந்தப் பிரதேசம் வளம் பெறவேண்டும், மக்கள் அறவாழ்க்கை வாழ வேண்டும் என்று பெரிதும் விரும்பியவர், அதற்காகவே பாடுபட்டவர். அந்தச் செய்திகளை சிறுசிறு பிரசுரங்கள் மூலம் பரப்பி வெற்றியும் கண்டவர்— என்றார்.

மருதனார்மடம் கிறிஸ்தவ ஆச்சிரமத்தைச் சேர்ந்த வண. சாம் அல்பிறட் அடிகளார் தமது அஞ்சலியில் தெரிவித்ததாவது:

அமரர் கனகராசா அவர்கள் இறை நம்பிக்கையில் திளைத்து நிறை வாழ்வு வாழ்ந்தார். அடுத்தவரின் துயரம் தீர்ப்பதில் முன்னின்றார். மதவேறுபாடு பாராட்டாதவர். அறப்பணிகளுக்கே தன்னை அர்ப்பணித்து தமது செல்வத்தையும் செலவிட்டார். அவர் மரித்துவிட்டது உண்மையானது எனினும் அவர் வாழ்கிறார் என நினைத்துக் கொண்டு அவர் செய்த சேவைகளை நினைத்து அவரது விருப்பங்களை நிறைவேற்றுவதே சிறந்த அஞ்சலியாகும்— என்றார்.

மூத்த பத்திரிகையாளர் செல்லப்பா நடராசா தமது அஞ்சலியில்—

கலாநிதி கனகராசா இந்த நூற்றாண்டின் மக்கள்வாழ்வு குறித்து மட்டுமல்ல அடுத்த நூற்றாண்டு குறித்தும் சிந்தித்து திட்டமிட்டு தனிமனிதனாக நின்று செயற்பட்ட யுகபுருஷர்.

எங்கள் மண்ணின் பசுமை, நீர்வளம், நிலவளம், மரவளம், கனிவளம் என்பன குறித்து தீர்க்கதரிசனத்துடன் சிந்தித்தவர். குளங்களைத் தோண்டுதல், வாய்க்கால்களைத் திருத்துதல், கிணறுகளைத் தோண்டுதல் என்று இயற்கைவளங்களைப் பேணி எதிர்கால சந்ததியினருக்கும் கையளிக்க வேண்டும் என்ற சிந்தனை அவரிடம் மேலோங்கி நின்றது. சுற்றுப்புறச் சூழலைப்போது காப்பது குறித்து இப்போது தான்பலரும் பேசுகிறார்கள். நாற்பது ஐம்பது வருடங்களுக்கு முன்னரே அதனை உணர்ந்து குடாநாட்டின் எல்லாப்பகுதிகளிலும் மரங்களை, பனைகளை நட்டவர் பனைவளம் பேணுவதிலும் அவருக்கு நிகர் அவரே என்றார்.

யாழ். அரசாங்க அதிபர் கே. சண்முகநாதன், திவ்ய ஜீவன சங்கத்தலைவர் கே. கனகரத்தினம், சொக்கன், செங்கைஆழியான், அ. பொ. செல்லையா சி. சிவமகாராசா சர்வோதயம் திருநாவுக்கரசு உட்பட மற்றும் பலரும் அஞ்சலி உரை ஆற்றினர்.

கோம்பயன் மணல் மயானத்தில் திரளான மக்கள் மத்தியில் அவரது பூதவுடல் தீயுடன் சங்கமமானது.

(அ-9)

## கொழும்பில்

# இராணுவ மரியாதையை வாஜ்பாய் ஏற்கக் கூடாது!

## ராஜாராம் கோரிக்கை

சென்னை, ஜூலை 26

'சார்க்' மாநாட்டில் பங்குபற்ற கொழும்பு செல்லும் போது இந்தியப் பிரதமர் வாஜ்பாய் அங்கு இராணுவ மரியாதை எதனையும் ஏற்றுக் கொள்ளக்கூடாது.

முன்னாள் அமைச்சர் ராஜராம் இவ்வாறு கோரியுள்ளார்.

பிரதமர் வாஜ்பாய்க்கு அவர் அனுப்பியுள்ள கடிதம் ஒன்றிலேயே இக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:—

இலங்கையில் கடந்த 14 ஆண்டுகளாக கெரில்லா போர் நடைபெற்று வருகிறது. இந்த விஷயத்தில் ஐ.நா. பாதுகாப்புச்சபை மௌனமாக இருந்து வருகிறது. ஐ.நா. பொதுச்செயலாளராக கோபி அனான் பதவி ஏற்ற பிறகு இது வரை இலங்கைக்குச் செல்லவில்லை. மேலும் தமிழர்கள் மற்றும் சிங்களவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவில்லை. ஆகையால் இலங்கைப் பிரதமருடன் பேசியபிரதமர்வாஜ்பாய், தமிழர்பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும். இலங்கையைப் போன்று தமிழர்கள் மற்றும் பெண்களை இலட்சக் கணக்கில் அனுப்பும் நிலை உலகில் வேறு எந்த நாட்டிலும் இல்லை.

இலங்கையில் நடந்த ஒரு அசம்பாவித சம்பவத்தை உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி இலங்கையில் முன்பு பயணம் மேற்கொண்டார். அந்த நாட்டு இராணுவத்தின் மரியாதையை அவர் ஏற்றுக் கொண்டார். அப்போது இராணுவ வீரர் ஒருவர் ராஜீவ்காந்தியைத் தாக்கினார். அந்தத் தாக்குதலில் இருந்து அதிர்ஷ்டவசமாக அவர் உயிர் தப்பினார்.

தற்போது நீங்கள் கொழும்பில் நடைபெறும் சார்க் மாநாட்டில் கலந்து கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. நீங்கள் கொழும்பில் எந்த விதமான இராணுவ மரியாதையையும் ஏற்கக்கூடாது— இப்படி அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-3)

## வலி.வடக்கில்

# மேலும் 540 பேருக்கு ரூ. 5,000 கொடுப்பனவு

சுன்னாகம், ஜூலை 26

வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவில் மேலும் 540 பேருக்கு மீளக் குடியமர்ந்தோர் கொடுப்பனவான 5ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

இவர்களுக்கான காசோலைகள் உரிய வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக, பிரதேச செயலகத்தினர் தெரிவித்தனர்.

இப்பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்தவர்களில் தற்போது வழங்கப்படுவர்களுடன் சேர்த்து 3 ஆயிரத்து 589 குடும்பங்கள் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவைப் பெற்றுள்ளனர்.

(ஐ-27)

## கொடுப்பனவு

சுன்னாகம், ஜூலை 26

வலி. வடக்கு பிரதேச செயலகத்தின் கீழ் பணிபுரியும் ஊழியர்களுக்கு கஷ்ட நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

சுற்றறிக்கைக்கு அமைவாக மத்திய அரசு ஊழியர்கள் ஒரு வருடத்துக்கான நிலுவையையும், மாகாண அரசு ஊழியர்கள் எட்டு மாதத்துக்கான நிலுவையையும் பெற்றனர்.

(ஐ-27)

## வினா விடைப் போட்டி

வலிகாமம்தெற்கு, ஜூலை26

உடுவில், தெல்லிப்பழை கோட்டப் பாடசாலைகளின் கோட்ட மட்டத்திலான கணித— விஞ்ஞான வினா - விடைப் போட்டிகள் எதிர்வரும் 30ஆம் திகதி நடைபெற உள்ளன.

உடுவில் கோட்டப் பாடசாலைகளுக்கான போட்டிகள் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும் —

தெல்லிப்பழைக் கோட்டப் பாடசாலைகளுக்கான போட்டிகள் யூனியன் கல்லூரி மண்டபத்திலும் நடைபெற உள்ளன.

பாடசாலை மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மாணவர் அணிகள் இப்போட்டிகளில் கலந்து கொள்ளும்.

(ஐ-152)

## சிறுவர் மெய்வன்மைப் போட்டி

தென்மராட்சி, ஜூலை 26

மட்டுவில் மத்தி சோமஸ்கந்தா அறவழி மழலைகள் கல்விப் பூங்கா சிறார்களின் மெய்வன்மைப் போட்டிகள் இன்று ஞாயிறு பகல் 1.00 மணிக்கு மட்டுவில் மகா வித்தியாலய மைதானத்தில் வ. தர்மலிங்கம் தலைமையில் நடைபெறும்.

போட்டிக்கு முதன்மை விருந்தினராக மட்டுவில் மகா வித்தியாலய அதிபர் மு. பாலசுப்பிரமணியமும், சிறப்பு விருந்தினர்களாக டாக்டர்பெ. பிலிப்ஸ், அறவழி கல்வித் திட்ட இணைப்பாளர் செல்வி செ. செல்வநாயகி கௌரவ விருந்தினராக எம். கே. ஜீவகதாஸ் ஆகியோரும் கலந்து கொள்வர்.

(ஐ-117)

## வேலணையில் இளைஞன் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 26

இரவுவேளை திருட்டுத்தனமாக வளவினுள் நுழைந்தவர் வீட்டுக்காரனை வெட்டித் தாக்கிவிட்டு தப்பி ஓடினார்.

வேலணையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் பாலசிங்கம் பாலச்சந்திரன் (28 வயது) என்பவரே கத்தி வெட்டுக்கு உள்ளாகிகாயமடைந்தவராவார்.

நள்ளிரவு நாய் குரைப்பதைக் கேட்டு எழுந்து வெளியே சென்று பார்த்த போதே அங்கு பதுங்கியிருந்த ஒருவர் கைகளிலும், கழுத்திலும் வெட்டி விட்டு ஓடியதாக தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

(இ-15)

## கோப்பாயில் அமையவுள்ள

# கல்விக் கல்லூரிக்கு 4 கோடி ரூபா நிதி!

யாழ்ப்பாணம், ஜூலை 26

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் அமைய இருக்கும் கல்விககல்லூரி வேலைகளுக்கென 4 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் ஒக்டோபர் மாதமளவில் யாழ். கல்விக் கல்லூரியை இயக்க வைப்பதற்கான முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

ஆரம்பிக்கப்பட இருக்கும் கல்விக்கல்லூரியில் வருடாந்தம் 300 மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் கட்டப்படும் கல்வியியற் கல்லூரி நாட்டின் பதினான்காவது கல்வியியற் கல்லூரியாக அமையும்.

எதிர்காலத்தில் இந்த 14 கல்வியியற் கல்லூரிகளிலும், இரு தொடர்கல்வி நிலையங்களிலுமிருந்து வெளியேறுவோருக்கே ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படும்.

கல்வியியற் கல்லூரிகள் இயங்க ஆரம்பித்த ஓரிரண்டு வருடங்களின் பின்னர் ஆசிரிய கலாசாலைகள் மூடப்பட்டுவிடும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(உ-6)

## தேர் திருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 26

யாழ். வண்ணை ஸ்ரீ வாலாம்பிகாசமேதவைத்தீஸ்வரன் ஆலய தேர்த்திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறும். நாளை காலை தீர்த்தத்திருவிழா இடம்பெறும்.

(இ-139)

★ ★ ★

கல்வியங்காடு அருள்மிகு இலங்கைநாயகி மனோன்மணி அம்பாள் கோயில் தேர்த்திருவிழா இன்று இடம்பெறும்.

நாளை தீர்த்தோற்சவமும் ஆடிப்பூர விழாவும் இடம்பெறும்.

(இ-15)

★ ★ ★

ஆனைக்கோட்டை அருள்மிகு பிடாரி அம்பாள் ஆலயத்தின் தேர்த் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

நாளை தீர்த்தோற்சவம் காலை 10 மணிக்கும் அடுத்து மாலை கொடி இறக்கும் வைபவமும் இடம்பெறும்.

(இ-139)

★ ★ ★

வண்ணார்பண்ணை அருள்மிகு வீரமாகாளி அம்பாள் ஆலய தேர்த்திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறும். நாளை தீர்த்தோற்சவம் இடம்பெறும்.

(இ-139)

★ ★ ★

சுன்னாகம் கதிரமலைச் சிவன் தேவஸ்தான சுவர்ணாம்பிகாதேவி மஹோற்சவ தேர்த்திருவிழா இன்று நடைபெறும்.

இன்றுமாலை 5.30மணிக்கு அம்பாள் தேரில் ஆரோகணித்து அருள் பாலிக்கவுள்ளார்

(இ-27)

## காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 26

நேற்றுக்காலை கல்வயல் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்த கே. திருஞானம் (வயது 42) என்பவர் காயமடைந்தார்.

இவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(இ-7)

## அரியாலையில் மிதிவெடி

யாழ்ப்பாணம் ஜூலை 26

மாலைவேளையில்கள்சீவுவதற்காகச் சென்ற இளைஞன் மிதிவெடியில் சிக்குண்டு இடதுகால் முழங்காலுக்குக் கீழ் துண்டிக்கப்பட்டார்.

அரியாலைப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற இச் சம்பவத்தில் கொழும்புத்துறை, வசந்தபுரத்தில் இருந்து இடம்பெயர்ந்து அரியாலை முள்ளி வெளிப்பகுதியில் வசிக்கும் புவனேந்திரன் வோல்டர் மயூரன்(வயது 26) என்ற இளைஞனே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(இ-ரி-15)


## தேவை

முன் அனுபவமுள்ள அச்சுக்கோப்பாளர்கள், இயந்திர இயக்குநர்கள் தேவை. திறமைக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு:

நிர்வாகி

சந்நிதியான் ஆச்சிரமம்

தொண்டமானாறு.

(சி/4384)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை திரேசா அன்புப்பணியாளர் சேவை குடாநாட்டுக்கு அவசியம்

## இங்கு வந்துள்ள பிரதிநிதி தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 26

'போரினால் பாதிக்கப்பட்டுள்ள யாழ். மண்ணில் அன்னைதிரேசாவின் அன்புப் பணியாளர்சபையின் சேவை தேவையாக இருக்கிறது என்பதனை நேரில் கண்டறிந்துள்ளோம்'.

இவ்வாறு யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள அன்னைதிரேசாவின் அன்புப் பணியாளர் சபையைச் சேர்ந்த அருட்சகோதரி றெஜின் தெரிவித்தார்.

யாழ். ஆயர் இல்லத்தில் ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் தலைமையில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலே அவர் இவ்வாறு கூறினார்.

இந்தச் சந்திப்பின்போது அன்னைதிரேசாவின் அன்புப் பணியாளர் சபையைச் சேர்ந்த அருட்சகோதரி மரியூவானும் உடனிருந்தார்.

சந்திப்பின்போது அவர் மேலும் கூறியதாவது:-

ஆதரவற்றவர்களுக்கு உதவி செய்வதே எமது சபையின் நோக்கமாகும்.

மொழி, மதம், இனம் என்ற வேறுபாடின்றி அனைத்து மக்களுக்கும் பணி செய்து வருகின்றோம். ஏழைகளுக்கு உதவுவதே இறைவனுக்குச் செய்யும் தொண்டாகும். அதாவது ஆதரவற்றவர்கள், திக்கற்றவர்கள், ஏழைகள் போன்றோரில் தான் நாம் கடவுளைக் காண்கின்றோம். ஒவ்வொரு தனிமனிதனும் இறைவனுக்கு முன்னால் பெறுமதி வாய்ந்தவன்.

1950 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட எமது சபை உலகில் 126 நாடுகளில் இயங்கி வருகிறது. உலகெங்கும் 4 ஆயிரம் அருட்சகோதரிகள் பணியாற்றுகிறார்கள். இலங்கையில் கொழும்பு, கண்டி, காலி, குருநாகல், வவுனியா உட்பட 7 இடங்களில் இந்தச் சபை இயங்குகிறது. இங்கு 500 ஆதரவற்றவர்கள் எம்மால் பராமரிக்கப்பட்டு வருகிறார்கள். 25 அருட்சகோதரிகள் பணிபுரிகின்றார்கள்.

யாழ்ப்பாணத்தில் நாவாந்துறை, குருநகர், பாஷையூர், நல்லூர், இருபாலை, இணுவில், கொக்குவில், உடுவில் உட்படப் பல இடங்களைப் பார்வையிட்டதுடன் பலரையும் சந்தித்தோம். இங்கு எமது சபையின்பணி தேவையாக இருக்கிறது. இது தொடர்பாகக் கொழும்பு திரும்பியதும் கல்கத்தாவில் உள்ள எமது சபையின் சிரேஷ்ட தாயார் அருட்சகோதரி நிர்மலாவுக்குத் தெரிவித்து யாழ்ப்பாணத்தில் எமது பணிகளைத் தொடர்வதற்கு நடவடிக்கைகளை எடுப்போம்.

யாழ். ஆயரின் அழைப்பின் பேரில் சிரேஷ்ட தாயார் எம்மை இங்கு அனுப்பி வைத்தார்.

இப்படி அவர் தெரிவித்தார்.

கடந்த 20ஆம் திகதி யாழ்ப்பாணம் வந்த அன்னை திரேசாவின் அன்புப் பணியாளர் சபை பிரதிநிதிகள் இருவரும் இன்று கொழும்பு திரும்பவுள்ளனர். (இ-5)


உ

வேலணை பெருங்குளம்

**ஸ்ரீ முத்துமாரி அம்பிகை**

மஹோற்சவ விஞ்ஞாபனம் - 1998

கொடியேற்றம் 28 - 07 - 98 செவ்வாய்க்கிழமை

தேர் 06-08-98 வியாழக்கிழமை

தீர்த்தம் 07-08-98 வெள்ளிக்கிழமை

பகல் திருவிழா - காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரை.

மாலைத் திருவிழா - மாலை 3மணி தொடக்கம் 6 மணி வரை.

பிரதம குரு:

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான விசேஷ குரு சிவஸ்ரீ. வை. மு. பரமசாமிக்குரு.

10 தினங்களிலும் அன்னதானம் வழங்கப்படும்.

-- பரிபாலன சபையினர்

வேலணை. (57869)



## விமான ரிக்கெற் கண்டீர்களா?

எஸ். நிறைஞ்சன் என்பவரது 5658 008457 இலக்கமுடைய 723511089V தேசிய அடையாள அட்டை இலக்கம் பொறிக்கப்பட்ட மொனரா விமான பயணச்சீட்டு தவறிவிட்டது. கண்டெடுத்தோர் ''திருமதி சுப்பிரமணியம்'' உதயன் பணிமனை, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும்.

(57876)



## கண்ணீர் அஞ்சலி

சபையின் நீண்ட ஆயுள் கால அங்கத்தவரும், போஷகருமாயிருந்து சபையின் பணிகளில் அயராது தொண்டு புரிந்து இறைபதம் எய்திய

மில்க் வைற் அதிபர் சிவதர்ம வள்ளல்

**க. கனகராசா J. P.**

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சைவபரிபாலன சபை
யாழ்ப்பாணம்.

(57829)


# கூரையில் கிடந்த கிரனேட் கீழே விழுந்து வெடித்தது

## சங்கானையில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 26

சங்கானைப் பகுதியில், வீட்டுக் கூரையில் கிடந்து தவறி விழுந்த கிரனேட் வெடித்துச் சிதறியதில் சிறுவன் ஒருவர் காயமடைந்தார்.

சங்கானை, வல்லைவீதிப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் ரி. லோகேஸ்வரன் (வயது 13) என்பவரே காயமடைந்தவராவார். வேய்வதற்காக வீட்டுக் கூரையைப் பிடுங்கிய வேளையே கூரைக்குள்ளிருந்து விழுந்து கிரனேட் வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)

### புனித…

(முதலாம் பக்கத் தொடர்)

வில்லை.

திருநாள் திருப்பலி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7-00 மணிக்கு யாழ். ஆயர் பேரருள் திரு. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையால் ஒப்புக்கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

திருப்பலியைத்தொடர்ந்து புனிதரின் திருச்சொரூப பவனியும் ஆசீரும் இடம்பெறும்.

நேற்றைய தினம் மாலை 6-00 மணிக்கு சாதாரண திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. (இ-51)

### படகுகளில்…

(முதலாம் பக்கத் தொடர்)

வும் அப்பகுதியில் உள்ளவர்கள் தெரிவித்தனர்.

படையினர் மோட்டார், பீரங்கி மற்றும் சிறு ஆயுதங்கள் சகிதம் இத்தாக்குதலை முறியடித்தனர் என்றும் —

படையினர் தரப்பில் 2 பேர் பலியானதாகவும் 5பேர் காயமடைந்ததாகவும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

புலிகள் தரப்பில் 9 பேர் கொல்லப்பட்டதாகவும் 25 பேர் காயம் அடைந்ததாக பாதுகாப்பு அமைச்சின் தலைமைச் செயலகம் மேலும் தெரிவித்தது.

எனினும் புலிகளின் உத்தியோகபூர்வ தகவல் ஏதும் இது குறித்து நேற்று வெளியாகவில்லை.

ரி. 56-1, எல். எம். ஜி-1, ரி. 56 மகசின்-2, எல். எம். ஜி. ட்ரம்ஸ்-1, கையில் இயக்கும் ரேடியோ செட்-1, கிரனேட்-1, ஆர். பி. ஜி ஷெல்-2 ஆகியவற்றை புலிகள் கைவிட்டுச் சென்றதாக பலாலி ராணுவத் தலைமையச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

மோதல் நடந்த பகுதிகளில் அடுத்த நாள் காலை இரத்த அடையாளங்கள் காணப்பட்டதாக எமது செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

இப்பகுதியில் நேற்று படையினரால் தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டன. (இ-17-51-139-15-5)

## விலை உயர்வு

பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியைச் சேர்ந்த சாவகச்சேரி, பளை, கொடிகாமம் ஆகிய பிரிவுகளில் ஆகஸ்ட் முதலாம் திகதிமுதல் பனங்கள்ளின் விலை ஒரு ரூபாவினால் அதிகரிக்கப்படவுள்ளதாக கொத்தணிப் பொது முகாமையாளர் தெரிவித்தார்.

### திருமலை…

(முதலாம் பக்கத் தொடர்)

விக்கப்பட்டது.

நண்பகல் 12 மணியளவில் வைத்தியசாலைக்கு விஜயம் செய்த வடக்கு — கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் ஜி. ஞானகுணாளன் நிர்வாக உத்தியோகத்தரின் செயற்பாடுகள் குறித்து விசாரணைகள் மேற்கொள்வதாக உறுதி அளித்ததைத் தொடர்ந்து வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது. (இ-7)

### சாவகச்சேரி…

(முதலாம் பக்கத் தொடர்)

மாணவி ஒருவரும் காயமடைந்தனர்.

புளொட் உறுப்பினர்கள் இருவரும் ஒரு மோட்டார் சைக்கிளிலும் —

ஈ. பி. டி. பி. உறுப்பினர்கள் இருவரும் இன்னொரு மோட்டார் சைக்கிளிலும்— வந்த போதே இந்த விபத்து இடம் பெற்றது.

இந்த விபத்தில் காயம் அடைந்த மாணவி விபத்தின் போது இடையில் சிக்கியவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சாவகச்சேரி கல்வயல் வீதியைச் சேர்ந்த தேவசகாயம் பிள்ளை மேரி அருள்ராணி (17 வயது) என்பவரே காயமடைந்தவர் ஆவார்.

இவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

மேற்படி விபத்தில்படுகாயமடைந்த ஈ. பி. டி. பி. மற்றும் புளொட் உறுப்பினர்கள் நால்வரும் சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு நேற்றுப் பிற்பகல் மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டனர். (இ-7-117-139)

### கப்பல் சேவை…

(முதலாம் பக்கத் தொடர்)

யில் ஈடுபடுத்தப்படவுள்ள கொரிய நாட்டுக் கப்பலான ''டிமோகிறசி'' முதலாம் திகதியே கொரியாவிலிருந்து இலங்கை நோக்கிப் புறப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

ஆறாம் திகதி கப்பல் திருமலைக்கு வந்து சேர்ந்ததும் யாழ். வருவதற்காகத் திருமலையில் தங்கியுள்ள பயணிகள் 7ஆம் திகதி முதல் கப்பல் மூலம் யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்படுவர் என்றும்—

வவுனியா, மன்னார் ஆகிய இடங்களில் நலன்புரி நிலையங்களில் யாழ். செல்வதற்காகத் தங்கியுள்ள அகதிகள் தொகுதி தொகுதியாகத் திருமலைக்கு அழைத்து வரப்படுவர் எனவும்—திருமலைப் பிரதேச செயலர் எஸ். வேலும்மயிலும் மேலும் தெரிவித்தார். (இ-7)

### வாஜ்பாயை கூட்டாக…

(முதலாம் பக்கத் தொடர்)

கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இடம்பெறவுள்ள விசேட தேநீர் விருந்துக்கு தமிழ்க் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் —

அந்த வேளையில் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் பிரதமர் வாஜ்பாயைச் சந்தித்துக் கலந்துரையாடுவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)




உ

கல்வியங்காடு

**இலங்கை நாயகி மனோன்மணி அம்பாள் தேவஸ்தான**

**இரதோற்சவம்**

இன்று **26 - 07 - 1998** ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு அகிலாண்டநாயகியாக, அன்னை பராசக்தியாக, அடியவர்களின் துயர் தீர்க்கும் அம்பாள் இன்று தேரில் ஆரோகணித்து வந்து அடியார்களுக்கு அருள் வழங்குகின்றாள். அம்பாளின் அருள்பெற அடியார்கள் அனைவரும் விரைந்து வாரீர்! வாரீர்!! வாரீர்!!!

விளம்பர அன்பளிப்பு:

**ஊர்மிளா போட்டோ**
பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு.

**ஈசன் விறகு காலை**
(பல்பொருள் வாணிபம்) பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு.

(சி/4390)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26-07-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.